# மலர்ந்த ஜீவியம்

## ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**Vol. I Issue 11 February 2012**

இம்மாத மலரில்....

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் | 2 |
| இம்மாதச் செய்தி | 12 |
| சாவித்ரி | 13 |
| யோக வாழ்க்கை விளக்கம் VI | 15 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 20 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 23 |
| லைப் டிவைன் - கருத்து | 28 |
| அஜெண்டா | 30 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 32 |
| அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும் | 33 |
| கல்லணை | 37 |
| அன்பர் கடிதம் | 49 |
| அன்னை வழியில் சாதிப்பது | 51 |


### ஜீவியத்தின் ஓசை

சொல்லாதது புரிவது அறிவு.

அமைதியின் சமர்ப்பணம் ஆத்ம சமர்ப்பணம்.

அறிவு சூட்சுமமானால் ஆண்டு மாதமாகும்.

நடக்காதது, நடக்க முடியாதது முடிய வேண்டும். முடியாது என்பது, நம்மால் முடியாது என்பதால் - நாம் விலகுவதால் - அன்னை முடிப்பார்.

❋❋❋

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XXI. The Ascent of Life

There is a third difficulty. *Page No.214*
It is division. *Para No.10*
Force is divided from consciousness.
It is so in the evolutionary existence.
Evolution has created the division.
The division is there in the evolution.
They are successive formations.
They are three.
They are Matter, Life, Mind.
Each has its own law of working.
The Life is at war with the body.
It attempts to force it.
It wants to satisfy itself.
Desires, impulses, satisfactions and demands are to be satisfied.
Life's capacity is limited.



## 21. உயரும் வாழ்க்கை

மூன்றாம் தடையுண்டு.
அது பிரிவினை.
சக்தியும் ஜீவியமும் பிரிந்துள்ளன.
அது பரிணாம வாழ்வுக்குரியது.
பரிணாமம் பிரிவினையை உண்டு பண்ணிற்று.
பிரிவினை பரிணாமத்திலிருக்கிறது.
அவை தொடர்ந்த ரூபங்கள்.
அவை மூன்று.
மனம், வாழ்வு, ஜடம் அவை.
அவற்றிற்குரிய சட்டம் உண்டு.
வாழ்வு ஜடத்துடன் போராடுகிறது.
வாழ்வு ஜடத்தைக் கட்டாயப்படுத்துகிறது.
தன்னைத் திருப்தி செய்ய வாழ்வு முனைகிறது.
ஆசை, உந்துதல், திருப்தி, தேவை பூர்த்தியாக வேண்டும்.

வாழ்வின் திறன் அளவுக்குட்பட்டது.

It is possible only in the divine body.
The divine body is immortal.
The body is dumb.
Life makes a demand on it.
The body is enslaved, tyrannised over, suffers.
It is in dumb revolt.
The Mind is at war with both.
Sometimes it helps Life.
It helps against the Body.
Sometimes Mind restrains the vital urge.

It seeks to protect the corporeal frame.
It does so from life's desires.
From passions and over-driving energies.
It also seeks to possess the Life.
It turns its energy to the mind's ends.

To the utmost joys of the mind's own activities.

It is used to the satisfaction of mental aims.
To the fulfillment of aesthetic emotional aims.

They are fulfilled in human existence.
The Life too finds itself enslaved.
The Life is misused.
It is in frequent insurrection against Mind.



அது தெய்வீக உடலில்தான் முடியும்.
தெய்வீக உடல் அழிவற்றது.
உடல் ஊமை.
வாழ்வு அதைக் கட்டாயப்படுத்துகிறது.
உடலை அடிமைப்படுத்தி கொடுமை செய்து வதைக்கிறது.
உடல் ஊமையாகப் புரட்சி செய்கிறது.
மனம் வாழ்வு, உடலை எதிர்த்துப் போராடுகிறது.
சில சமயங்களில் மனம் வாழ்வுக்கு உதவும்.
உடலுக்கு எதிராக வாழ்வுக்கு மனம் உதவும்.
வாழ்வுடைய வேகத்தைச் சில சமயங்களில் மனம் கட்டுப்படுத்தும்.
மனம் உடலைக் காப்பாற்றும்.
வாழ்வின் ஆசையினின்று காப்பாற்றும்.
வேகத்தினின்றும், விரட்டும் சக்திகளினின்றும் காப்பாற்றும்.
வாழ்வை ஆட்கொள்ள முயலும்.
மனத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய அது இந்தச் சக்தியைப் பயன்படுத்துகிறது.
மனத்தின் செயல்களின் தீவிர இன்பத்திற்குப் பயன்படுத்துகிறது.
மன நோக்கம் திருப்திபட அதை உபயோகப்படுத்துகிறது.
உள்ளத்தின் நோக்கம் கலையுணர்வு பூர்த்தியாகவும் பயன்படுத்துகிறது.
மனித வாழ்வில் அவை நிறைவு பெறுகின்றன.
வாழ்வும் அடிமையாகிறது.
வாழ்வும் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.
அடிக்கடி மனத்தை எதிர்த்துப் புரட்சி செய்கிறது.

Mind is the ignorant half-wise tyrant seated above.

This is the war of our members.
The Mind cannot satisfactorily resolve it.
It is a problem insoluble to it.
It is an aspiration of an immortal being.
It is in the mortal life and body.
It can only arrive at compromises.
It is a long succession.
Or they end in the abandonment of the problem.
It is by a submission to the materialist.
It is to the mortality of our being.
It is our apparent being.
Or it ends in submitting to the ascetic.
It follows the religionist.
It ends in the rejection of earthly life.
It condemns life and withdraws from it.
It withdraws to happier and easier fields of existence.
There is a true solution.
It is a principle beyond Mind.
There Immortality is the law.
It conquers the mortality of our existence.
There is a fundamental division.
It is between force and consciousness.
It is the force of Nature.
It is the force of conscious being.



மனம் அறிவில்லாத அரைகுறை விவேகியான கொடுங்கோன்மையுடையது.
நம் ஜீவனின் பகுதிகள் இடும் போர் இது.
மனத்தால் இதைத் திருப்தியாகத் தீர்க்க முடியாது.
இது மனத்தால் தீர்க்க முடியாத பிரச்சனை.
அழியாத ஜீவனின் ஆர்வம் இது.
அழியும் உடலிலும், வாழ்விலும் இது உள்ளது.
மனம் சமரசம் செய்யும்.
அவை தொடர்ந்த சங்கிலி போன்றவை.
அல்லது பிரச்சனையைக் கைவிடுவர்.
நாத்திகவாதிக்கு அடிமைப்படுவதில் முடியும்.
நம் ஜீவன் அழிவதில் அது முடியலாம்.
அது நம் ஜீவனாகத் தோன்றுவது, ஜீவனில்லை.
அல்லது துறவிக்குப் பணியும்.
மதவாதியை ஏற்றுக் கொள்ளும்.
உலக வாழ்வை மறுப்பதில் முடியும்.
வாழ்வைத் தவறெனக் கருதி அதை விட்டு விலகும்.
சுலபமான மகிழ்ச்சியான வாழ்வை நாடுகிறது.

சரியான தீர்வுண்டு.
அது மனத்தைக் கடந்த தத்துவம்.
அங்கு அமரத்துவம் சட்டம்.
அது வாழ்வின் நிலையாமையை வெல்லும்.
அடிப்படையான பிரிவினையுண்டு.
அது சக்தியும் ஜீவியமும் பிரிந்துள்ளது.
சக்தி இயற்கையினுடையது.
அது தன்னையறியும் ஜீவனின் சக்தி.

It is the original cause of this incapacity.
The mental, vital, physical are divided.
Not only that.
Each of them is divided against itself.
The body has a capacity.
The instinctive soul of the conscious being has a capacity.
Within it is the physical Purusha.
The vital force has a capacity.
The impulsive soul has a capacity.
One is less than that.
The mental energy has a capacity.
The emotional soul and intellectuality has a capacity.
Within it is the mental Purusha.
For the soul is the inner consciousness.
It aspires for its own complete self-realisation.
There is an individual formation of the moment.
It is always pushed by the soul.
It is abnormal to its poise.
It is transcendent of it.
It is thus constantly pushed.
It has much trouble in answering it.
It evolves from the present to a greater capacity.
This is a triple soul.
It tries to fulfill its demands.
In it it is distracted.



இந்த இயலாமையின் ஆரம்ப காரணமிது.
மனம், வாழ்வு, உடல் பிரிந்துள்ளன.
அது மட்டுமல்ல.
ஒவ்வொன்றும் தமக்குள் பிரிந்துள்ளன.
உடலுக்குத் திறனுண்டு.
ஜீவனின் ஆத்மாவுக்குத் திறனுண்டு.

அதனுள் உடலின் புருஷன் உள்ளான்.
பிராண சக்திக்குத் திறனுண்டு.
உந்தும் ஆத்மாவுக்குத் திறனுண்டு.
முந்தையது பிந்தையதைவிடக் குறைவு.
மனத்தின் சக்திக்குத் திறமையுண்டு.
உணர்வுக்கும் அறிவுக்கும் திறனுண்டு.

அதனுள் மனத்தின் புருஷன் உள்ளான்.
ஆத்மா உள்ளுறை ஜீவியம்.
தன்னிறைவுக்காக அது ஆர்வமெழுப்புகிறது.
அந்த நேரத்திற்குரிய தனிப்பட்ட ரூபமுண்டு.
ஆத்மா அதை உந்தித் தள்ளும்.
அதன் நிலைக்கு அது புறம்பானது.
அது அதைக் கடந்தது.
இடைவிடாது அது உந்துகிறது.
அதற்குப் பதில் கூறுவது சிரமம்.
உள்ளதினின்று பெரிய திறனைப் பரிணாமத்தால் அடைகிறது.
இது மூவகையான ஆத்மா.
அதன் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயல்கிறது.
அம்முயற்சியால் அதன் கவனம் கலைகிறது.

It is driven to set instinct against instinct.
It sets impulse against impulse.
It sets emotion against emotion.
Idea is against idea.
It satisfies one thing.
It denies another.
It repents.
It returns on what it has done.
It adjusts, compensates, readjusts ad infinitum.

It arrives at no principle of unity.
Mind is the conscious power.
It should harmonise and unite.
It is limited in its knowledge and in will.
But they are disparate.
They are also at discord.
The principle of unity is in Supermind.
It is above.
There alone is the conscious unity.
It is a unity of all diversities.
There alone will and knowledge are equal.
They are in perfect harmony.
There is a divine equation.
Consciousness and Force seek it.
Here they arrive at it.

*Contd....*

❋❋❋



உணர்வும் உணர்வும் மோதுகின்றன.
உந்துதல் உந்துதலை எதிர்க்கிறது.
உணர்ச்சி உணர்ச்சியை எதிர்க்கிறது.
எண்ணம் எண்ணத்தை எதிர்க்கிறது.
ஒன்றைத் திருப்திப்படுத்துகிறது.
மற்றதை மறுக்கிறது.
அது வருத்தப்படுகிறது.
செய்ததை மறுக்கிறது.
சரி செய்து, ஈடு செய்து, மீண்டும் முடிவில்லாமல் சரி செய்கிறது.
ஐக்கியத்தை அது எட்டுவதில்லை.
மனம் தன்னையறியும் சக்தி.
சுமுகத்தையும் ஐக்கியத்தையும் மனம் ஏற்படுத்த வேண்டும்.
அதன் ஞானமும், உறுதியும் அளவுடையவை.
அவை தனித்து வேறுபட்டுள்ளன.
அவை பிணக்கானவை.
ஐக்கியம் சத்திய ஜீவியத்தினில் உள்ளது.
அது மேலேயுள்ளது.
தன்னையறியும் ஐக்கியம் அங்கு மட்டுமுள்ளது.
எல்லா பிரிவினைகளையும் அது ஒன்றுபடுத்தும்.
அங்கே ஞானமும் உறுதியும் சமம்.
அவை சுமுகமானவை.
தெய்வத்திற்குரிய சமநிலையுண்டு.
ஜீவியமும் சக்தியும் அதை நாடுகின்றன.
இங்கு அதைச் சாதிக்கின்றன.

தொடரும்......

❋❋❋

*இம்மாதச் செய்தி*

**ஒரு முறை சமர்ப்பணம்**

**செய்தால் மோட்சம் கிட்டும்.**





**P.135 In Nescience began her mighty task**

**உயர்ந்த அவள் கடமை உதிக்கும் இருளுலகம்**

- ☆ முடிவு பெறாத வேலையை அறிவில்லாமல் தொடர்கிறாள்
- ☆ ஞானம் தடம் மாறி திணறுகிறது, விவேகம் கிடைத்தபாடில்லை
- ☆ கண்மூடி பயிலும் நடை மெதுவாக மேலெழுகிறது
- ☆ தெய்வ சக்தி பெற்ற சிறு ஜீவன் எனத் திரியும்
- ☆ நரகத்தின் வாயிலும் வந்து நிற்கும் இளம் ஆத்மாவென
- ☆ சொர்க்கத்தை நாடி மூடுபனியூடே உழலும்
- ☆ மெதுவாக மேலெழும் பாதையில் அவள் நடையைத் தொடர்கிறாள்
- ☆ மங்கலான தெளிவற்ற ஆழ் மனதில் ஆரம்பிக்கும்
- ☆ பூமிக்குக் கடைசி முடிவு வரும் வழி அதுவே
- ☆ இருண்ட இலட்சியத்தையறிய இதுவே வழி
- ☆ நம்மைப் பின்னிழுக்கும் பல, இறைவனுக்குப் புதிரானவை
- ☆ சிறைப்பட்ட ஆத்மாவின் திறந்த வெளி விடுதலை
- ☆ ஆபத்தான வாயில்கள் மூலம் செல்லும் விரைவான பாதைகள்
- ☆ மங்கலான இருளுள் தற்செயலாய் நுழைந்தாள்
- ☆ மனம் எழுமுன் பெருகி நிறையும் உணர்ச்சிகள்
- ☆ உருவம் பெற்று இடம் பிடிக்க முண்டியிடும்

☆ இரவும் சாவும் இழைந்து கொண்டாடும் உறவான வாழ்வு
☆ சிறு மூச்சுவிட சாப்பிட்ட காலன் அளித்த உணவு
☆ தத்தெடுத்த தறுதலை உரிமையுள்ள உறுப்பினராகி
☆ ஊமை இருளின் இராஜ்ஜியத்தில் ஏற்ற ஆழ்மனச் சக்தி
☆ கொஞ்ச நாள் தங்கும் நம்பிக்கையுமின்றி
☆ ஒளிமயமான எண்ணத்திலிருந்து விலகி, சத்தியத்தை ஒதுக்கி
☆ உரிமையுள்ள இடம் கண்ணுக்குத் தெரிந்தது - தனித்த பிறவி
☆ பதவியிழந்து, உருக்குலைந்த, வேதனையுறும் சக்தி
☆ பொய்யின் புதுமுகம் சத்தியத்தை ஏற்று
☆ தெய்வப்பிறப்பிற்கு முரணான முகப்பு
☆ ஒளியையும், அழகையும் உதாசீனப்படுத்தி
☆ விலங்கின் அவமானத்தை விரும்பி உலகுக்கறிவித்து
☆ மறைப்பின் துணையின்றி, கடுமையான நிர்வாணம்
☆ முத்திரையிட்ட உருவம் ஏற்று, பதித்து
☆ சொர்க்கமும், ஜாதியும் விலக்கி நம்பிக்கை இழந்து
☆ வீழ்ந்து, அழிவு தரும் நிலையைப் பெருமையாக ஏற்று,
☆ தெய்வ சக்தி பெற்றுயர்ந்த சக்தியின் பிடிப்பு
☆ விலங்குணர்வின் அருளற்ற அவலம்

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையை நினைப்பது சிருஷ்டியைக் கடப்பது.***



# யோக வாழ்க்கை விளக்கம் VI

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**II/56) நன்றும் தீதும் ஒன்றென அறியும் நேரம் இந்த ஞானம் பிறக்கிறது. அது தீமையைக் கரைத்து நன்மைக்கு எதிரியில்லை என்றாக்குகிறது.**

☆ **தீமையெனும் நன்மையைக் காணும் சத்திய ஜீவன்.**

❋ தற்கொலை தவறு என உலகம் ஒப்புக் கொள்கிறது.
❋ பகவான் தற்கொலை என்பது நெடுநாள் வாழும் ஆசை தலைகீழ் திரும்புவது என்கிறார்.
❋ அன்னையும் தற்கொலை தவறு, எந்தப் பிரச்சனையையும் தீர்க்காது என்கிறார்.
❋ பெர்ட் ரண்டு ரஸ்ஸல் உலகப் புகழ் பெற்ற தத்துவ நிபுணர்.
❋ அவர் மாணவர் எழுதிய Ph.D. பட்டக் கட்டுரை அவரிடம் ஆய்வுக்கு வந்தது.
❋ கொண்டுவந்து கொடுத்த மாணவர் இது உங்களுக்குப் புரியாது எனக் கூறிக் கொடுத்தார்.
❋ அவர் Existentialism ஒரு புதிய தத்துவத்தை ஏற்படுத்தியவர்.
❋ அவர் தற்கொலைக்கொப்பான காரியங்களைச் செய்திருக்கிறார்.
❋ ஏராளமான செல்வம் அவரை வந்தடைந்தது.
❋ அத்தனையையும், அனைவருக்கும் கொடுத்து விட்டார்.
❋ பணத்தைப் பொறுத்தவரை அது தற்கொலை.

❋ போர் முனையில் சாகும் இடங்களை வலிய நாடி போரிட முன் வந்தார்.

❋ இரண்டாம் உலகப் போர், மனித குலம் ஜட வாழ்வைக் கடந்து மன வாழ்வு பெற்ற செயல்.

❋ ஏராளமான பேர் வலிய உயிரை மாய்க்க விரும்பி முனைந்த போர் அது.

❋ ஜட வாழ்வு தற்கொலை செய்து கொண்ட நிகழ்ச்சி.

❋ ரஸ்ஸல் மாணவர், தற்கொலையால் உயிர் பிரியும் பொழுது மரண வாயிலில் ஜோதி எழும், அதை விரும்பி மக்கள் தற்கொலை செய்து கொள்கின்றனர் என்றார்.

❋ 1945-இல் போர் முடிந்த பின், உலகம் பெற்ற அளவு கடந்த வாய்ப்புகள் அவர் கூறியது உண்மை என எடுத்துக் கூறுகின்றன.

❋ முன்னேற்றத்திற்குத் தடையானவை தீமை. அதை அழிப்பது நல்லது.

அது அழிவதால் முற்படுவது நன்மை. தீமையை அழிக்கும் செயல் நன்மை.

❋ எலிசபெத் டார்சியைத் திட்டுகிறாள். அது தவறு.

❋ அவள் திட்டுவதால் அவன் திருந்துகிறான்.

❋ அவள் திட்டு நன்மையில் முடிகிறது.

❋ அதனால் திட்டு நல்லதாகிறது.

❋ தானே தீமை அழியாத காலத்தும், அழியும் சந்தர்ப்பம் எழாத நேரமும், தீமை தற்கொலை செய்து கொள்ள விழையும்.

*மனித குலம் அது போல் செய்து கொண்ட தற்கொலை இரண்டாம் உலகப் போர்.*



❋ அந்த அழிவுக்குக் காரணமான தலைவர் சர்ச்சில்.

❋ சர்ச்சிலைப் பதவியில் அமர்த்தியதும், அவருக்கு வெற்றி பெற்றுக் கொடுத்ததும் யோக சக்தி. அதைக் கொடுத்தவர் பகவான் ஸ்ரீ அரவிந்தர்.

❋ சர்ச்சில் அசுரன்.

❋ அசுரன் செயலும் அகில உலகத்திற்கு நன்மை பயக்கும்படி செயல்பட்டது பகவான் ஸ்ரீ அரவிந்தர் யோக சக்தி - சத்திய ஜீவிய சக்தி.

❋ வரலாற்றிலும், சொந்த வாழ்விலும் இச்சக்தி செயல்படுவதை அறிவது ஆத்மீக விழிப்பு.

❋❋❋

**II/57) நன்றும் தீதும் மனத்தின் தார்மீக நிலைக்குரியன. வலியும் சந்தோஷமும் உணர்வுக்கும் உடலுக்கும் உரியன. வலியை (ஆனந்தமாகவும்) சந்தோஷமாகவும், சொரணையை சொரணையில்லாததாகவும் அறிவது உணர்விலும், உடலிலும் இந்த புதிய திருவுருமாற்றத்-திற்குரிய நோக்கமாகும்.**

☆ **உடலறியும் சத்திய ஜீவியம் வலியை ஆனந்தமாக்கும்.**

❋ சிருஷ்டிக்கு முன் உள்ளது ஆனந்தம்.

❋ வலி சிருஷ்டியால் ஏற்பட்டது.

❋ நன்றும் தீதும் மனத்தின் சிருஷ்டி.

❋ சொரணையும், சொரணையில்லாததும், உடலுக்கும், உடல் சம்பந்தப்பட்டதற்கும் உரியவை. திருவுருமாற்றம் என நாம் கூறுவது பல நூற்றாண்டுகட்கு முன் உடலிலும், பிறகு உயிரிலும், சமீபத்தில் 100 ஆண்டு காலமாக மனத்திலும்

சுட்டிக் காட்டப்பட்டதுண்டு.

- இரண்டு நாள் பட்டினியாக இருந்த சிங்கத்திற்கு மனிதனைப் போட்டு, சிங்கம் அவன் உடலைக் கிழித்துச் சாப்பிடுவதைப் பார்த்து மகிழ்ந்தது 2000 ஆண்டுகட்கு முன்.
- பிறந்த குழந்தை மெலிவாக இருந்தால் அதை வெய்யிலில் போட்டு சாகடித்த நாள் அது.
- சிவபெருமான் கழுகாக வந்து சிபிச்சக்கரவர்த்தியின் உடலை வெட்டித் தரும்படி கேட்டார்.

*உடல் உலகை ஆண்ட நேரம் அது.*

- கணவன் மனைவியைத் தன் சொத்து எனவும், பெண்டு பிள்ளைகளை அடிக்கவும், கொலை செய்யவும் உரிமை பெற்ற நாள் அவை.
- உடன்கட்டை ஏறி உடலையே கொடுத்தால்தான் உண்மை என்பது அக்காலம்.
- உடலுக்குரியது சாங்கியம், சம்பிரதாயம்.
- வேதம், ஞானம், கர்மமாகப் பிரிந்தது.
- யாகம், யக்ஞம் என்பது கர்மம்.
- அவற்றைப் பயபக்தியுடன் செய்தால் எதிர்பார்க்கும் பலன் தவறாது கிடைக்கும்.
- தீமையொழிந்து நன்மை ஆள வேண்டி பாரத யுத்தம் நடந்தது.
- கௌரவர்கள் தீமையே உருவானவர்கள்.
- அவர்கள் வம்சமே அழிந்தது.
- சத்திய ஜீவியம் முதலில் மனத்தில் எழும்.
- பிறகு உயிரில் தலைகாட்டும்.



- முடிவாக உடலையடையும்.
- உடலிலும் மேற்பகுதி, ஆழம் - ஜீவியம், பொருள் - என இரு பகுதிகள் உள்ளன.
- உடலின் ஆழத்தைச் சத்திய ஜீவியம் அடைவது சத்திய ஜீவன் பிறப்பது.
- மனத்தில் எழுந்த சத்திய ஜீவியம் உடலை நோக்கிப் போகும். அதே சமயத்தில் சத்திய ஜீவியம் எழுந்து முனி, ரிஷி, யோகி, அவதார புருஷ நிலைகளையடைகிறது.
- உடலை அது அடைவதும், அவதாரத்தைக் கடப்பதும் ஒரே நேரம்.
- கீழும் மேலும் முடிவில் சந்தித்துப் பூர்த்தியாகும்.
- அந்நேரம் சொரணையற்றதும் சொரணை பெறும்.
- மனத்திலிருந்து மேலெழும் சத்திய ஜீவியம் முனி, ரிஷி, யோகி, அவதார நிலைகளில் அந்நிலைக்குரிய சத்திய ஜீவியம் - சைத்திய புருஷனை - உருவாக்குகிறது.
- வாழ்வு பூரணமானது என்பதைக் கீழும் மேலும் சந்திப்பதால் அறிகிறோம்.
- பூரணத்தின் (dimension) அம்சங்கள் அனந்தம்.
- அவற்றுள் கீழும் மேலும் சந்திப்பது ஒன்று.

*தொடரும்....*

❋❋❋

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***நினைவைக் கடந்து அன்னையை நினைப்பது அன்னை நினைவு.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

## 55. மனச்சாட்சி பொன் விலங்கு - உதவி உபத்திரவமாகிறது.

- மனச்சாட்சியற்றவன் மனிதனிலன்.
- ஊரில் பெரியவன் அநியாயம் செய்கிறான், அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.
- எவரும் அடிபட்டவனுக்குச் சாட்சி சொல்லவோ, ஆதரவு தரவோ, நியாயம் கூறவோ முன் வருவதில்லை.
- என்ன மனிதர்கள், மனச்சாட்சியில்லாதவர்கள் என்கிறோம்.
- பயந்து சொல்லாதவர் பலர், பணக்காரனுக்குப் பரிந்து சொல்லாதவரும் உண்டு.
- எப்படியானாலும் **மனச்சாட்சியில்லாதவர்**.
- பயம் உள்ளவரை ஒருவன் மனிதனாக முடியாது என்கிறார் அன்னை.
- மனிதன் என்பதற்குத் தைரியம், மனச்சாட்சி, நேர்மை, மனிதத்தன்மை அடையாளம்.
- அன்னையிடம் வந்தபின் உலகில் பெரிய விஷயங்கள் எதிராவது வழக்கம்.
- பிரகலாதனுக்கு அந்த இக்கட்டான நிலை ஏற்பட்டது.
- மனச்சாட்சிக்குப் பணிந்தால் பாவம் செய்யும் நிலையுண்டு.
- சிறுவனைத் துரத்தி வரும் ரௌடியிடம் நம் வீட்டில் அவன் ஒளிந்துள்ளதைக் கூறுவது மெய்யா, பொய்யா என்பது தர்ம சங்கடம்.



- நம்மிடம் பெருந்தொகையை ஒப்படைத்தவர் காலமானார்.
- அவர் மகன் சூதாடி. பணத்தைக் கேட்கிறான். தகப்பனார் கொடுத்தது அவனுக்குத் தெரியாது.
- மகனுடைய பிள்ளைகள் கல்யாணம், படிப்புக்குச் சில ஆண்டுகள் கழித்துப் பயன்படும் பணம் அது.
- உள்ளதை ஒப்புக் கொண்டால் மகன் அதைப் பெற்று சூதில் இழப்பான்.
- அவன் பணம், மறுக்க உரிமையில்லை, நாமென்ன செய்ய முடியும் என்றால் குழந்தைகள் வாழ்வு வீணாகும்.
- மறுப்பது பொய், மனச்சாட்சிக்கு விரோதம்.
- இந்த நிலை அனைவருக்கும் வாராது.
- உயர்ந்தவனுக்கும், தாழ்ந்தவனுக்கும் இந்த இக்கட்டான நிலையில்லை.
- மனச்சாட்சியைக் கடந்து தெய்வத்தையடையும் - அன்னையை ஏற்கும் - கட்டத்தில் உள்ளவர்க்கே இது வரும்.
- **இந்த நேரம் மனச்சாட்சி பொன் விலங்கு. உடைக்கப்பட வேண்டும்.**
- கரண்டில் மாட்டிய நண்பனைக் காக்க முடியாது. நாமும் சேர்ந்து உயிரிழக்கலாம்.
- உதவி செய்தால் உபத்திரவம் வரும். அவனுக்குப் பலனில்லை.
- எல்லையில் உள்ளவர்க்கே எழும் பிரச்சனைகள் இவை.
- எல்லையை எட்டாதவர்க்கும், எல்லையைக் கடந்தவர்க்கும் இல்லை.
- நேருவும், பட்டேலும் உயிர் போனாலும் மகாத்மாவுக்குப் பணிந்தார்கள்.

- ❈ மகாத்மா நாட்டைப் பிரிக்கக் கூடாது என்கிறார். பிரிக்காவிட்டால் சுதந்திரமில்லை.
- ❈ நேருவுக்கும் பட்டேலுக்கும் மனச்சாட்சி குறுக்கே நின்றது.
- ❈ அதை மீறி, மகாத்மாவை மீறினர்.
- ❈ எளிய மனிதனுக்கு வரும் பிரச்சனையில்லை.
- ❈ அன்னையை ஈடுபாடாக ஏற்கும் வரை இது எழாது.
- ❈ ஈடுபாடு அதிகமானால், தவறாது எழும்.
- ❈ மனம் அன்னையில் லயித்தால், பிரச்சனை தானே விலகும்.
- ❈ பிரச்சனை மனிதனுக்கு.
- ❈ பிரச்சனை விஷயத்திற்கில்லை.
- ❈ மனம் அளவு கடந்து தெளிவுபடாமல் இக்கட்டத்தைத் தாண்ட முடியாது.
- ❈ முன்கூட்டி இது நமக்கு வரக்கூடாது எனப் பிரார்த்திப்பவர்க்கு வாராது.
- ❈ வழியில்லை என்பது அன்னையிடம் அறவேயில்லை.

*தொடரும்.....*

❈❈❈

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***மனித முயற்சியை அருளாக மாற்றுவது சரணாகதி.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னை அருளின் மந்திரம்.***



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

✡ **எது வேண்டும்?**

❈ **"மனம் வேலைக்குரிய திறமை பெற்றுள்ளது.**
**ஆன்மீக எண்ணங்களால் நிரம்பியுள்ளது.**
**சுறுசுறுப்பு, தெளிவு, விவேகம் காணப்படுகிறது".**

- ஒருவரிடம் இது இருந்தால் அவரைப் பாராட்டினால் அது நமக்கு வரும்.
- இது நமக்கு வேண்டுமானால், உள்ள இடத்தை அறிந்து அவரைப் பாராட்டும் மனநிலை தேவை. *இவை உள்ளவரை குறை சொன்னால் இவை வேண்டாம் எனப் பொருள்.*
- பொறுப்பு, நேர்மை, நியாய மனப்பான்மை போன்றவற்றைக் கருதினால் நமக்குப் பல விஷயத்தில் எதிரானவையிருக்கும்.
  - அவற்றைக் காண்பது, ஏற்பது, உண்மை sincerity.
  - பிறரை இயல்பாக நாம் கேலி செய்தால், எதைக் கண்டு சிரிக்கிறோமோ அது நம்முள் இருக்கும், நிறைய இருக்கும்.

***உண்மை நம்மை எது நாடி வருகிறதோ அதனால் தெரியும்.***

❁ ஒருவரை ஏன் பாராட்டத் தோன்றுகிறது?

அவரிடம் உள்ள பெரிய குணம் கவருவதால் அப்படித் தோன்றுகிறது.

அதற்கு மேல் அவரிடம் மறைந்துள்ள குறை அதிகமாகக் கவரும்.

வெறுப்புக்கு முதற் காரணம் அவரிடம் உள்ள நல்ல குணம்.

கெட்ட குணம் வெறுப்பு தாராது. கவனிக்காமலிருப்போம்.

வெறுப்பும், விருப்பும் நாம் யார் எனக் காட்டும்.

நமக்கு என்ன எதிர்காலமுண்டு என இரு திசைகளிலும் காட்டும்.

நல்லவன் நம்மை நாடி வந்தால், நாம் நல்லவனாகப் போகிறோம் என்றும், கெட்டவன் நாடி வந்தால் கெட்டவனாகப் போகிறோம் எனவும் காட்டும்.

எது முனைப்பாக இருக்கிறதோ அதுவே நடக்கும்.

✡ **பிரியம் தவற்றைக் கரைக்கும். குறை, தவறு, தீமை முதலியவற்றை அவர் மீது நமக்குள்ள அன்பு கரைத்துவிடும்.**
**பிரியம் தவற்றைச் சரியாக்கும், குறையை நிறைவாக்கும், கெட்டதை நல்லதாக்கும். எதுவும் மனத்தைப் பொருத்தது.**

ஒரு நாவலில் ஸ்கார்லெட் என்ற இளம்பெண் போக்கிரி. பிரெட் என்ற கதாநாயகன்.

அவளைப் போக்கிரி என்பதால், அதற்காகப் பிரியப்படுகிறான்.



போக்கடாவுக்கு ஏராளமான ஆதரவாளர்கள் உண்டு.

அதனால் போக்கிரியும், போக்கடாவும் சரியாகாது.

நாம் அப்படியிருக்கலாம் என்றாகாது.

போக்கிரி மீதும் கனிந்த ஆசை எழும், போக்கிரியாக இருப்பதால் ஆசை வரும்.

பிரெட் அதையே ஸ்கார்லெட்டிடம் கூறுகிறான்.

சில நடிகர்கட்கு ஏராளமான ரசிகர்கள் உண்டு. குணம் கவருவது பிரபலம். அது எதிராகவுமிருக்கும்.

மட்டம் கவர்ச்சி தரும்.

உயர்வு தரும் கவர்ச்சிக்கும், மட்டம் எழுப்பும் கவர்ச்சிக்கும் உள்ள வித்தியாசம் தெரிய மட்டமான நிலையைத் தாண்டி வரவேண்டும்.

மட்டம் கவருவதும், இலஞ்சம் பெருமை தருவதும், திருட்டில் ஆர்வம் கொள்வதும் நாளடைவில் சொல் மாறி, உணர்வு மாறும்.

✡ **அதிகபட்ச சாதனை**

✳ **எந்த ஸ்தாபனத்திற்கும், எவருக்கும், எந்தக் குடும்பத்திற்கும் அதிகபட்ச சாதனையொன்றுண்டு. அதை உயர்த்த வேண்டுமானால், ஒருவர் அடிப்படையில் தன்னை உயர்த்த வேண்டும்.** ***அந்த அதிகபட்ச வாய்ப்பில் எவரும் 10%கூட பயன்படுத்துவதில்லை. நம் குடும்பத்தில் 1%கூட பயன்படவில்லை.***

☼ அமெரிக்கர் திறமையாகச் செயல்படுகிறார்கள். அன்னையின் திறமை வேறு. பட்டதாரி ஆசிரியர்களால் முடியாது என ஹெட்மாஸ்டர் நினைத்ததைப் பியூன் செய்தது அன்னையின்

திறமை. இராமாபுரத்துச் செல்வம், ஆங்கிலப் பரிட்சையில் முதலாவதாக வந்த கிராமத்துப் பாஸ் செய்ய முடியாத மாணவன், 24 மடங்கு உபரியான பொற்கிழி அன்னையின் சாதனை. சக்தி எங்கிருந்து வந்தது?

- எதுவுமே இல்லாத பிரம்மம் எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறது.

  *திறமையிருப்பது தடை. திறமையைக் கைவிடுவது திறமையின் உற்பத்தி ஸ்தானம் உயிர் பெறுவது resources.*

  அது அபரிமிதமாகப் பெருகும்.

  பகவானுடைய அபரிமிதம் புரிவது கடவுள் புரிவது.

  அக்ஷய பாத்திரம், காமதேனு, கற்பக விருக்ஷம், பிரம்ம தண்டம் எங்கிருந்து உற்பத்தி செய்கிறது என அறியலாம். அதற்கு முக்கிய அம்சம் குறை நிறையைப் பூர்த்தி செய்யும் இன்றியமையாத அமைப்பு என்ற தெளிவு அவசியம். அதையறிய பொறுமை, அடக்கம் தேவை. இது ஞானம். ஞானம் பலிப்பது attitudeஆல். அடக்கம் இனிமையால் பலிக்கும். இனிமை சொல்லைக் கடந்த, மனத்தைக் கடந்த ஜீவனின் இனிமை. அது அதிகபட்ச வாய்ப்பைத் தருகிறது.

✡ **வாழ்வு அனைத்தையும் அனுமதிக்கும்.**

**ஆன்மா எதையும் அனுமதிக்காது.**

**பெரிய ஆத்மா அனைத்தையும் ஏற்கும். அவற்றையெல்லாம் வாழ்வு அனுமதிக்காது.**



**சாதிப்பது வேறு, சரியாக இருப்பது வேறு, சரியாக சாதிப்பது பெரியது.**

அமெரிக்கா இன்று உலகை ஆளும் காரணம்

1. ஜாதி, மத, வகுப்பு வேறுபாடில்லை.
2. திறமையுள்ளவன் சாதிப்பான்.
3. பாகுபாடில்லை என்ற சுதந்திரம் சாதிக்கிறது.
   சந்தர்ப்பம் திறமையைத் தருகிறது.
   திறமை உற்பத்தி செய்யும்.
   உற்பத்தி பணம்.
4. எல்லா இடத்திலும் organisationயைப் பயன்படுத்து-கின்றனர்.
5. அவர்கள் எளிதாகப் பெரிய அளவில் சாதிக்கிறார்கள் என பகவான் கூறுகிறார்.

ஜாதி, மத, வகுப்பு வேறுபாடுகளை அழித்தது, கடின உழைப்பு, வாய்ப்பு, ஸ்தாபன முறை, பெரிய திட்டம் ஆகியவை அமெரிக்கர் சொத்து. அது பரிணாம சத்தியம்.

பெரியது, சிறியது, நல்லது, கெட்டது என்ற பாகுபாடு மனத்திலிருக்கக் கூடாது.

அறிவோடு வேலை செய்ய வேண்டும், வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும், முறையைக் கையாள வேண்டும், பெரியதாக நினைக்க வேண்டும்.

அப்படிப்பட்டவருக்கு "100 ரூ." எளிது.

*உங்கள் மனநிலையை இக்கோணத்திலிருந்து சோதனை செய்து பாருங்கள்.*

*தொடரும்....*

❋❋❋

* அடக்கம் எனில் இறைவன் முன் நாம் துரும்பு எனவும் எவரும் எதுவும் இறைவன் எனவும் அறிதல்.

## பலவான ஜீவாத்மாக்களில் முழு ஒருமையை அறிய ஞானம் அஞ்ஞானத்தை ஏற்க வேண்டும். அது அமரத்துவம், ஆனந்தம் தரும்.

- ஞானத்தை ஏற்கலாம், அது பெரும் பலன் தரும்.
- அஞ்ஞானத்தை ஏற்கலாம், அதனால் அகந்தையின்று விடுபடலாம்.
- இரண்டையும் இருநிலையிலும் - பரமாத்மா, ஜீவாத்மாவில் - ஏற்பது சட்டம்.
- தாயாரை ஏற்கலாம், அது கடமையை நிறைவேற்றும்.
- மனைவியை ஏற்கலாம், அது பிரியத்தைப் பூர்த்தி செய்யும்.
- இருவரும் நம்முள் நமது சொந்த குணமாக இருக்கிறார்கள்.
- பிரியம் கடமையை மீறும் இடமுண்டு, கடமை பிரியத்தை ஒதுக்கும் நேரமுண்டு.
- பிரியம் கடமையை அறிந்து ஏற்பதும், கடமை பிரியத்தை உணர்ந்து ஏற்பதும் முடியாததில்லை.
- இங்கு யோசனைக்கே இடமில்லை.
- வலிமையைக் கருதுதல் வன்முறைக்கு வழி செய்யும்.
- பலஹீனம் உள்ளங்கை நெல்லிக்கனியாக ஒளி விடும்.
- மோதும் இடம் தெரியும்.
- முடியாது என்பதில்லை, பிடிக்காது என்று அறிவோம்.
- பிடிக்காத கடமையைப் பிடித்தமாகச் செய்வது சைத்திய புருஷ சட்டம்.



- பிரியத்திற்காக ஏற்பது போல், பிரியத்திற்காக விலக்குதல் எளிதல்ல.
- இந்நிலையில் சிந்தனை ஸ்தம்பிக்கும்.
- சமர்ப்பணம் பலிக்காது.
- சமர்ப்பணம் பிரியத்தையோ, கடமையையோ, எண்ணத்தையோ வற்புறுத்தாது.
- சமர்ப்பணம் சமர்ப்பணத்தை வலியுறுத்தும்.
- சமர்ப்பணம் ஆரம்பத்தில் எதிர்ப்பாக மனத்துள்ளிருந்து தன்னை வற்புறுத்தும்.
- இது என்னால் முடியாது என்று முடிவு செய்வோம்.
- இடையில் கைவிடக் கூடாது என்பது நூலில் முதல் அத்தியாயம்.
- இறைவனை ஏற்றால் இடையில் கைவிட வேண்டாம்.
- உறுதி தேவை.
- உறுதியை விட, உள்ளம் அவனை நெகிழ்ந்து, அறிந்து ஏற்க வேண்டும்.
- உறுதிக்கு அசையாதது உள்ள நெகிழ்வுக்கு அசையும்.
- சமர்ப்பணம் காட்டும் வழி, மாறிய சூழலின் புது நிலை.
- சூழல் மாறி, புது நிலையெழுந்து, வழி விடும்வரை உறுதி உள்ள நெகிழ்வாகி உள்ளதைப் புறத்தில் வெளிப்படுத்தும் வரை நிலைகுலையாதது சமர்ப்பணம்.
- சமர்ப்பணம் தோல்வியறியாதது. மனிதன் தோற்பான்.
- மனிதனுள் உள்ள இறைவன் தோற்றதில்லை.

❋❋❋

## August 15 is the day when all past errors are effaced (Volume I, Page 326).

## ஆகஸ்ட் 15ஆம் தேதி கடந்த தவறுகள் கரையும் நாள்.

- எந்த ஸ்தாபனத்திற்கும் முக்கிய நாட்கள் உள்ளன. அன்று குறிப்பிட்ட வேலைகள் விசேஷமாக நிறைவேறும்.
- ரயில்வே ஸ்டேஷனில் ரயில் வரும் நேரம் அப்படிப்பட்டது.
- ஸ்டாக் மார்க்கட்டில் விலையேறும் நேரம் உண்டு, சரியும் நேரம் உண்டு.
- அரசியல் வாழ்வில் தேர்தல் முக்கிய நேரமாகும். அன்று எவரும் எந்த உயர்வையும் நாடலாம்.
- பள்ளிக்கூடம், கல்லூரிகளில் ஆரம்ப நாட்கள், பரீட்சை தினம் முக்கிய நாளாகும்.
- மனிதனுக்கு இளமை முக்கிய பருவம், திருமண நாள் வாழ்வைப் புனிதப்படுத்தும் நாளாகும்.
- பகவான் பிறந்த நாள் எவருடைய கடந்த கால தவறும் கரையும் நாள்.
  - 1945 ஆகஸ்ட் 15, உலக யுத்தம் முடிந்தது.
  - 1947 ஆகஸ்ட் 15 இந்தியா விடுதலை பெற்றது.
  - 1962 ஆகஸ்ட் 15 அன்று பகவான் ஆசிரமத்தின் மீது அமர்ந்திருந்தார்.
  - பக்தர்கள் ஆகஸ்ட் 15இல் தங்கள் வாழ்வின் குறை கரைவதைக் காணலாம்.



- ஆகஸ்ட் 15 நிறைவு நிறையும் நாள். குறையின் தொகுப்பு நிறைவை நோக்கி நகர்வது இயல்பு. அங்குக் கரைவதும் இயல்பு, இயற்கை, முறை, எதிர்பார்க்கக் கூடியது.
- தம் சொந்த வாழ்வில் திரண்டு வந்த குறைகள் திடீரெனக் கரைந்த அனுபவமுள்ளவர் அதை நினைவு கூர்ந்து அதற்குரிய தேதியை நினைத்துப் பார்த்தால் இவ்வனுபவம் புரியும்.
- பல அன்பர்கள் ஆசிரமம் வந்த நாள் அன்னையை முதலில் அறிந்த சமயம் ஆகஸ்ட் 15 என அறிவர். அந்த நாள் ஆகஸ்ட் 15ஆக இருப்பது வழக்கம்.
- ஒரு இன்ஜீனீயரை முதலாளியாக்க முயன்றபொழுது அதற்குரிய மூலகாரணம் என முயற்சியை மட்டும் எடுக்க மறுத்துவிட்டார். வருஷம் 7 ஆயிற்று. கடன் வளர்ந்தது, வருமானமில்லை, சர்க்கார் சம்பந்தப்பட்ட காரியங்களில் நிலுவை வளர்ந்தது. அப்பொழுது வந்த முதலாளி
  - முழு முதலும் போட சம்மதித்தார்.
  - இதுவரை ஏற்பட்ட கடன்களைக் கொடுக்கச் சம்மதித்தார்.
  - தொழிலில் பங்கு கொடுத்து, சம்பளம் தர முன் வந்தார்.

  இது தரிசன சமயம். ஆகஸ்ட் 15க்கு உரிய விசேஷமிது.
- மனித இதயம், குறிப்பாக ஆத்மா பகவானை நோக்கித் திரும்புவது பூமி இறைவன் வரும் தருணத்தை அறிவதாகும்.
- அதை அறிவிக்க வந்தவர் பகவான்.
- அவர் பிறந்த நாள் பூமிக்குப் பொற்கிழி, ஆன்மீகப் பரிசு.
- பூமி விழித்து, பரம்பொருளை அழைத்தால் இதுவே அத்தருணமாகும் என்கிறார் பகவான்.
- ஆகஸ்ட் 15 ஆயிர வருஷமாக இந்த முக்கியத்வமுடையது.

# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

251. *அள்ளாது குறையாது, சொல்லாது பிறவாது.*

**அள்ளினாலும் குறையாது, சொன்னாலும் பிறவாது.**

252. *மாவு இருக்கிற மணத்தைப்போல் கூழில் இருக்கும் குணம்.*

**மாவுக்கு மணமில்லாவிட்டாலும் கூழில் மணம் எழும்.**

253. *மனம் கொண்டது மாளிகை.*

**மனம் நினைத்து சாதிக்காமற் போனதுண்டா?**

254. *பொங்கின பால் போயப்பால்.*

**பொங்கின பாலும் பொங்கிய சந்தோஷம்.**

*தொடரும்....*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அன்னையை அழைப்பது அதிர்ஷ்டத்தை அழைப்பதாகும்.***

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***சரணாகதி அன்னை சாம்ராஜ்யம் தரும்.***



# அன்பர்களும் அன்றாட வாழ்க்கை நெறிமுறைகளும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

## 8. கடமையைச் செய்யாதபொழுது ஏற்படும் தடை

கடமைகள் பல பிரிவுகளை உடையன. அவை குடும்பத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகள், நண்பர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், நம்மை அண்டியவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், பெரியோர்களுக்கும், நாட்டுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகள் எனப் பல வகைப்படுவன. அவரவர்க்கு அமைந்த கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும். ‘வேண்டும்’ என்றே கடமைகளைச் செய்யாமல் விட்டுவிடுவது பெரும் தவறாகும்.

இதற்குச் சான்றாக இங்கே ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கலாம். கடலூரில் வசித்த அவர் பெயர் போர் முதலியார். முதலியார்க்கு முன்னால் உள்ள ‘போர்’ எப்படி வந்தது? அவர் செய்யும் தொழிலால் வந்தது. ‘போர்’க் கிணறு போட வேண்டுமானால், பூமிக்கடியில் நீர் ஊற்று இருக்கின்றதா என்பதை முதலில் கண்டுபிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் உழைப்பும், பணமும் வீணாகிப்போகும். அதனால் ‘போர்’க் கிணறு எடுக்க முனைபவர்கள், முதலில் நிலத்தடியில் உள்ள நீரூற்றைக் கண்டுபிடிக்கக்கூடிய நிபுணர்களைத் தேடி அலைவார்கள். அவ்வகைப்பட்ட நிபுணர்களில் ‘போர்’ முதலியார் கொடிகட்டிப் பறந்தார்.

அப்பொழுது அன்னை பூதஉடலில் இருந்தார். ஒரு நாள் ‘போர்’ முதலியார் அன்னையைத் தரிசிப்பதற்காக ஆசிரமத்திற்கு என்னோடு வந்திருந்தார். பொதுவாக, பெரியோர்களைக் காணச் செல்லும் எவரும் காணிக்கையாக ஒரு தொகையைச் செலுத்திவிட்டு, அவர்களுடைய ஆசியைப் பெற்றுச் செல்வது

வழக்கம். தெய்வப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட பெரியவர்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை அது. என்ன காரணத்தாலோ 'காணிக்கை தேவை இல்லை' என்று கருதிய முதலியார், வெறுங்கையுடன் சென்று வேண்டிய அளவு அன்னையின் ஆசிகளைப் பெற்றுத் திரும்பினார்.

அதற்குப் பிறகு முதலியாருக்கு உட்காரவும், மூச்சுவிடவும் நேரம் இல்லை. பல அரசாங்க அமைப்புகளிலிருந்தும் நீரூற்றைக் கண்டுபிடித்து உதவும்படி அவருக்கு ஏராளமான அழைப்புகள் வந்து குவிந்தன. அவர் நிமிடத்திற்கு நிமிடம் பறந்தார். தமிழ்நாட்டில் உள்ள பல ஊர்களுக்கும் சென்றார். ஊற்றுள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து, 'போர்'க் கிணறுகள் வெட்டுவதற்கு ஆலோசனைகள் கூறினார்.

ஆனால் அழைப்புகள் வந்த வேகத்தில் அரசாங்கத்திலிருந்து பணம் வந்து சேரவில்லை. ஆங்காங்கே அவருக்குச் சேர வேண்டிய ஊதியத் தொகை குறட்டை விட்டு உறங்கிக்கொண்டிருந்தது.

முதலியாருக்கு, 'என்ன செய்வது?' என்று புரியவில்லை. வர வேண்டிய தொகை அதிகம். பணம் வர வேண்டிய ஊர்கள் அதைவிட அதிகம். 'ஒவ்வோர் ஊராகச் சென்று அலுவலகங்களை முற்றுகையிட்டுப் பணத்தை வசூலிப்பது' என்று ஆரம்பித்தால், அவருக்கு வர வேண்டிய தொகையைவிடச் செலவு அதிகமாகிவிடும். அதனால் பணத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லை.

இந்த நிலையில் அவர் என்னைச் சந்தித்தார். அப்பொழுது, "வேலை செய்துவிட்டு வந்த இடங்களிலிருந்து வர வேண்டிய தொகை வாராமல் அப்படியே தங்கிவிட்டது. செலவுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது" என்று அலுப்பும், சலிப்புமாகக் கூறினார் அவர்.



எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. "நீங்கள் அன்னையைத் தரிசிக்கச் சென்ற சமயத்தில், 'காணிக்கை தேவை இல்லை; ஆசிகள் மட்டும் கிடைத்தால் போதும்' என்று கூறி, அன்னைக்குக் காணிக்கை சமர்ப்பிக்காமல் வந்துவிட்டீர்கள். நீங்கள் அன்னையிடம் பெற்ற ஆசியினால் உங்களுக்கு ஏராளமான அழைப்புகள் வந்தன. நீங்கள் காணிக்கையைச் செலுத்தத் தவறியதால், உங்களுக்குக் கிடைக்க வேண்டிய தொகைகள் வாராமல் தடைப்பட்டுவிட்டன" என அவருக்கு விளக்கினேன் நான்.

"அப்படியா? இப்பொழுது அந்தத் தவற்றை நிவர்த்தி செய்துவிட்டால், வர வேண்டிய தொகை முழுதும் வசூலாகிவிடுமா?" என்று கேட்டார் அவர்.

"வசூலாகிவிடும். அதில் சந்தேகமே இல்லை" என்றேன் நான்.

உடனே நூறு ரூபாய் நோட்டு ஒன்றை என்னிடம் கொடுத்து, அதனை அன்னைக்குச் சேர வேண்டிய காணிக்கையாக ஆசிரமத்தில் சேர்த்துவிடும்படிக் கூறினார் முதலியார்.

செய்யாமல் விட்டுவிட்ட கடமையை நிறைவேற்றியவுடன், அதுவரை அவருக்கு வாராமல் தடைப்பட்டிருந்த தொகைகள் அனைத்தும் 'மளமள'வென வசூலாகிவிட்டன. அதற்குப் பிறகு அவர் ஒரு கிராமத்தில் ஒரு வீட்டையும், சிறிது நிலத்தையும் விலைக்கு வாங்கிக்கொண்டு நிரந்தரமாகவும், நிம்மதியாகவும் தங்கிவிட்டார்.

'செய்ய வேண்டிய கடமையைச் செய்யாது விட்டால், அது தடையாக நின்று, பொருள் தட்டுப்பாட்டை உண்டாக்கி விடுகின்றது' என்பதை இதன் மூலம் உணரலாம்.

## 9. கணக்கால் பணம்

குடும்பத்தில் அவ்வப்போது பணம் வருகின்றது; வந்த பணமும் பல வகைகளில் செலவாகிக்கொண்டே இருக்கின்றது.

'வரவும் நமக்குத் தெரிந்தே வருகிறது; செலவும் நமக்குத் தெரிந்தே போகிறது. இதில் கணக்கு என்ன?' என்று விட்டேற்றியாக இருப்பது, பொருள் வரவுக்குத் தடையாகிவிடுகின்றது. வரவு, செலவுகளைக் குறித்துக் கணக்கு எழுதும்பொழுது, நம்முடைய கவனம் முழுதுமாகப் பணத்தில் ஈடுபாடு கொள்கின்றது. இந்தக் கவனம் மிகவும் முக்கியம். நாம் எந்த அளவிற்குக் கவனத்தைக் கொடுக்கின்றோமோ, அந்த அளவிற்குப் பொருள் நம்மைத் தேடித் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்.

*முதல் பாகம் முற்றும்.*

❁❁❁

### ஜீவிய மணி

*திரும்பி வந்தால் தீவிரம் உண்டு.*

*ஆசையால் ஏற்பது நண்பர். ஆத்மாவால் ஏற்பது அன்பர்.*

*சரணாகதி சர்வ ஆரம்ப பரித்தியாகிக்குரியது.*

*தன்னை பிறருக்காகக் கருதும் பரநலம்.*

*அகத்தைப் புறமாக்கினால் அகம் அவனுக்குரியதாகும்.*

*கேட்பது ஜடம், தருவது ஆன்மா.*

*ஒருவரிடம் இருந்தால், அனைவரிடமும் இருக்கும்.*

*உள்ளது போனால் உலகம் வரும்.*





## கல்லணை

சமர்ப்பணன்

திவ்யாவாலும், அவள் கணவன் சேகராலும், திருச்சியில் வேணு மாமாவிற்கும், கஸ்தூரி அத்தைக்கும் நடந்த அறுபதாம் கல்யாணத்திற்குப் போக முடியவில்லை. தாமதமானாலும் நேரில் போய் வர வேண்டிய அவசியத்தை முன்னிட்டு - மாமாவும், அத்தையும் மிகவும் வசதியானவர்கள் - தம்பதியர் நான்கு நாட்கள் திருச்சிக்கு விஜயம் செய்தனர். மாமா கொஞ்சம் ஆன்மீகப் பைத்தியம். அத்தை உலக நடைமுறை விவகாரங்களில் கெட்டியானவர். "ஏன் தம்பி, சென்னையிலேயே வளர்ந்த திவ்யா, காவிரியையும், கல்லணையையும் பார்த்தால் சந்தோஷப்படுவாள். போய் வருவோமா?'' என்று இரண்டாம் நாள் விருந்துபசாரங்கள் முடிந்த பின் கேட்டார் கஸ்தூரி அத்தை. "போகலாமே, நான் கூட காவிரியைப் பார்த்து ரொம்ப காலமாகி விட்டது'' என்றான் சேகர்.

சிறிது நேரத்தில் அனைவரும் தயாராக, கார் கல்லணையை நோக்கிப் புறப்பட்டது. காவிரி பாலத்தைத் தாண்டும் போது காரை நிறுத்தச் சொன்னார் வேணு மாமா. அனைவரும் பாதுகாப்புக் கைப்பிடி சுவரோரமாக நின்று பூரித்துப் பொங்கி ஓடும் காவிரியை வேடிக்கை பார்த்தனர். உற்சாகமாக இருந்த வேணு மாமா தம் வயதை மறந்து கைப்பிடிச் சுவரில் ஏறி உட்கார, ''பார்த்து சார், இப்படி உட்காருவது ஆபத்து" என்று எச்சரித்துவிட்டுப் போனார் ஒரு பொது நல விரும்பி.

"திவ்யா, உன் அதிர்ஷ்டம் இன்று நதி நிறைய நீர் ஓடுகிறது" என்றார் கஸ்தூரி அத்தை.

''நன்றாக இருக்கிறது. இதுதான் கல்லணையா?'' என்று கேட்டாள் திவ்யா.

''இது பாலம்தான். இன்னும் கொஞ்ச நேரம் பிரயாணம் செய்தால் கல்லணை வந்துவிடும். அதைச் சோழ மன்னன் கரிகால் பெருவளத்தான் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு கட்டினான். இன்னமும் கூட உபயோகத்தில் இருக்கிறது. எந்தத் தொழில் நுட்ப வசதிகளும் இல்லாத காலத்தில் காவிரிக்குக் குறுக்காக ஆயிரம் அடி நீளமும், அறுபது அடி அகலமும், கொண்ட அணைக்கட்டைக் கட்டி பல இலட்சம் ஏக்கருக்கு நீர்ப் பாசன வசதி செய்வதென்றால் சாதாரணமான காரியமா?" என்றார் வேணு மாமா.

''கரிகாலன் அந்தக் காலத்திலேயே அவ்வளவு பெரிய அணையைக் கட்டியிருக்கிறானே. ஆச்சரியமாக இருக்கிறது!'' என்று தன் மூதாதையரின் சாதனையை எண்ணி வியந்தாள் திவ்யா. ''இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. அவனைப் போல ஆள், அம்பு, அதிகாரம் நிறைந்த பெரிய இராஜாவானால் நான் கூடத்தான் எதையும் செய்வேன்" என்றான் சேகர்.

"நீங்கள் இராஜாவானால் அந்தப்புரம் நிறைய இராணிகளை வைத்துக் கொள்வீர்கள். உங்களுக்கு வேறு என்ன உருப்படியாகப் பண்ணத் தெரியும்? சும்மா வீண் பெருமை பேசாதீர்கள்" என்றாள் திவ்யா.

"ஏனம்மா அப்படி மட்டமாகச் சொல்லி விட்டாய்?" என்று கஸ்தூரி அத்தை சிரித்துக் கொண்டே தூண்டில் வீச, திவ்யா அதில் வசமாக மாட்டிக் கொண்டாள். ''அத்தை, இவர் ஒரு வேலையும் செய்வதில்லை. உட்கார்ந்த இடத்தை விட்டு நகர்வதில்லை. சதா புத்தகங்கள் படிப்பது அல்லது கம்ப்யூட்டரில் ஏதாவது பார்ப்பது தவிர வேறு ஒன்றுமே செய்வதில்லை. நண்பர்கள் கிடையாது. ஒரு விருந்து விசேஷம் கிடையாது. மாதத்திற்கு ஒரு முறை வீட்டை விட்டு வெளியே போனால்



அது அதிசயந்தான். திருச்சிக்கு வருவதற்குக் கூட எத்தனை தடவை இவரிடம் கெஞ்ச வேண்டியதாகி விட்டது'' என்று படபடத்தாள் திவ்யா.

"ஆனால் நம் சேகருக்கு ஓர் அதிர்ஷ்டம் உண்டு. அவன் ஒரு வேலையும் செய்யாவிட்டாலும், அவன் காரியங்கள் தானாக நடந்து விடும். சேகர் படிக்கும்போது எதிர் வீட்டுக் விமலா, பக்கத்து வீட்டு பத்மா, மேல் வீட்டு மைதிலி என்று எத்தனை பெண்கள் இவனுக்காக விழுந்து விழுந்து வேலை செய்தார்கள் தெரியுமா? நான் கூட மாமாவிற்கு அத்தனை வேலை செய்ததில்லை'' என்று பொடி வைத்துப் பேசினார் கஸ்தூரி அத்தை.

திவ்யா சேகரைப் பார்த்து கண்களால் கேள்விகள் கேட்க, அவன் வானத்தில் எத்தனை பறவைகள் பறக்கின்றன என்று கணக்கு போட ஆரம்பித்தான். "இத்தனை வருடங்கள் கழித்தும் இந்தப் பெயர்களை நீங்களே ஞாபகத்தில் வைத்திருக்கிறீர்கள் என்றால், எல்லோரும் கவனிக்கும் அளவிற்கு அவர்களுக்குள் ரொம்பவும் நெருக்கமான பழக்கம்தான் போலிருக்கிறது" என்றாள் திவ்யா.

"அதிலென்ன சந்தேகம்? சேகருக்குக் கதைகளில் ஆர்வம் உண்டு என்பதால் விமலா சதா புத்தகங்களை வாசித்து இவனுக்குக் கதை சொல்வாள். இவனுக்கு செஸ் பிடிக்கும் என்பதால் பத்மா தன் வேலையை விட்டு விட்டு இவனோடு ஓயாமல் செஸ் விளையாடுவாள். இவனுக்காக கடைக்குப் போவது, சினிமாவிற்கு டிக்கெட் வாங்கி வருவது எல்லாம் மைதிலியின் கடமை. இன்னொரு பெண் தினமும் ஏதாவது விசேஷமாக சமைத்துக் காரில் கொண்டு வந்து பரிமாறி விட்டு, கைச்செலவுக்குப் பணமும் கொடுத்து விட்டுப் போவாள். நல்ல இலட்சணமான பெண். அவள் பெயர் என்னப்பா?'' என்று கேட்டார் கஸ்தூரி அத்தை.

“மறந்து போய் விட்டது” என்று சொன்ன சேகர், பேச்சின் போக்கில் எச்சரிக்கையாகி, அவர்களை விட்டு சிறிது தள்ளி உட்கார்ந்து கொண்டு, கதிரவனின் ஒளிக் கரங்களின் தழுவலால் பளபளத்த நதிப்பெண்ணின் நீருடலில் மனம் மயங்கினான்.

“இப்போதும் அப்படியேதான் இருக்கிறார் அத்தை. அந்த நான்கு பெண்கள் செய்த வேலைகளை நான் இப்போது ஓர் ஆளாகச் செய்து கொண்டிருக்கிறேன்! ஏதோ நான் ஓடியாடி காரியங்களைப் பார்ப்பதால் குடும்பம் நடக்கிறது. நான் எதைச் சொன்னாலும், “நீ சும்மா இரு. எல்லாம் தானாக நடக்கும்” என்று என் வாயை மூடி விடுகிறார். வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டாமா? வீடு, வாசல், கார், நகை, நட்டு என்று வாங்க எனக்கும் ஆசை இருக்காதா? மாதாமாதம் வீட்டுச் செலவிற்கு சம்பாதித்தால் மட்டும் போதுமா? அவர் போலவே நானும் இருந்தால் குடும்பம் எப்படி நடக்கும்?” என்றாள் திவ்யா.

“உன் கவலையில் நியாயம் இருக்கிறது. காலம் எப்போதும் ஒரே மாதிரி இருந்து விடாது. நாளைக்கே சேகருக்கு ஏதோ ஒன்றாகி விட்டால் நீயும் குழந்தைகளும் என்ன செய்வீர்கள்? வயதும், சக்தியும் இருக்கும் போதே சுறுசுறுப்பாக பல காரியங்களைச் செய்து பணம் சேர்க்க வேண்டும். ஊரோடு ஒத்து வாழ வேண்டாமா? நீதான் கண்டிப்பாக இருந்து சேகரை ஒரு வழிக்குக் கொண்டு வர வேண்டும். நான் சொல்கிறபடி நீ கேட்டால், எல்லாம் சரி ஆகிவிடும். சேகரும் மற்றவர்களைப் போல மாறி விடுவான்” என்றார் கஸ்தூரி அத்தை.

“சொல்லுங்கள் அத்தை, செய்கிறேன்” என்றாள் திவ்யா. “இனிமேல் வெளி வேலை எதையும் நீ செய்யாதே. உதாரணத்திற்குத் தொலைபேசிக்குப் பணம் கட்ட நீ போகவில்லை என்றால், இன்டர்நெட் எப்படி வேலை செய்யும்? அவன் தானாகவே போய் பணத்தைக் கட்டிவிடுவான்” என்றார் கஸ்தூரி அத்தை.



“அப்புறம் அவர் சாப்பிடாமலே இருப்பாரே” என்று கவலைப்பட்டாள் திவ்யா. “இந்த அன்புதான் பெண்களின் பலவீனம். இதை ஆண்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இது போன்ற இடங்களில் நாம் கறாராக இருந்து விட்டால் வெற்றி நமக்குத்தான். ஒரு மனிதனால் எவ்வளவு நேரம் சாப்பிடாமல் இருக்க முடியும்? நீ இனி ஒரு வேலையும் பண்ணாதே. ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள். கிடுக்குப்பிடி போடு. தாகத்திற்குத் தண்ணீர் கேட்டால் கூட கொடுக்காதே. அவனாகவே எழுந்து வந்து குடிக்கட்டும். அப்போதுதான் உடம்பு வணங்கும். புத்தி வரும்” என்றார் கஸ்தூரி அத்தை.

“சரி அத்தை” என்று திவ்யா சொல்ல, குறுக்கிட்ட வேணு மாமா, “திவ்யா, உன் அத்தை பேச்சைக் கேட்காதே. சேகர் சொல்வதைக் கேள். நீ விரும்புவது கிடைக்கும்” என்றார். “எனக்குச் சொந்த வீடு வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. எப்படிக் கிடைக்கும்? மனை விலையைப் பார்த்தால் எங்களால் குடிசை கூட வாங்க முடியாது என்று தோன்றுகிறது. மற்றவர்களைப் போல நீக்குப்போக்காக ஏதாவது முனைந்து முயற்சி செய்தால்தானே சம்பாதிக்க முடியும்? ஒன்றும் செய்யாமல் பலன் எப்படி வரும்?” என்று கேட்டாள் திவ்யா.

“நமக்கு வரும் பலன் நம் அகநிலையைப் பொருத்தது. அது நாம் செய்யும் காரியங்களைப் பொருத்து வருவதில்லை. பயங்கரமான குற்றங்கள் செய்யும் கடத்தல்காரர்கள் அதிகாரத்தோடும், அந்தஸ்தோடும் வசதியாக வாழ்வதைப் பார்க்கிறோம். கோவிலே கதி என்று மூன்று வேளையும் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் வறுமையில் சிரமப்படுவதையும் பார்க்கிறோம். எந்தப் படிப்பும் இல்லாதவர்கள் பெரிய தொழில்களைச் செய்வதையும், அவர்கள் கீழ் பெரிய படிப்பு படித்தவர்கள் மாத சம்பளத்திற்கு வேலை பார்ப்பதையும் தினமும் பார்க்கிறோமே!” என்றார் வேணு மாமா.

''புரியாத புதிர்தான்'' என்றாள் திவ்யா.

''வாழ்வு என்று ஒன்று இருக்கிறது. அது நமக்கு முன்னும் இருந்தது, நமக்குப் பின்னும் இருக்கப் போகிறது. அந்த வாழ்விற்குப் பிற ஜீவன்களைப் போலவே குணாதிசயங்களும், பழக்க வழக்கங்களும் உண்டு. அது மனிதர்களின் தர்ம நியாயங்கள், சட்ட திட்டங்கள், நம்பிக்கைகளைப் பொருத்து செயல்படுவதில்லை. அதற்கென்று சட்டங்கள் உண்டு. தன் பாணியில் வாழ்வு பலன் தரும். அதை எதிர்க் கொண்டு நம் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வைப்பது சாதாரணமான காரியமில்லை. அகநிலை உயர்ந்தாலும், தாழ்ந்தாலும், அதற்கு வாழ்வு உடனே பலன் தந்து விடும். அகநிலைக்கு ஏற்பத்தான் வாழ்க்கை அமையும். அதைப் புரிந்து கொண்டு, உயர்ந்த பண்புகளை அகத்தில் ஏற்றுக் கொண்டு எதிர்பார்ப்பில்லாமலிருந்தால் நம் வாழ்க்கை வளமாகி விடும்'' என்றார் வேணு மாமா.

''இது அநியாயம். திவ்யா அருமையான பெண். அவளுக்கு நல்ல மனிதப் பண்பில்லை, அதனால்தான் வசதி குறைவாக இருக்கிறது என்று சொல்கிறீர்களே?'' என்று கேலியாகக் கேட்டாள் கஸ்தூரி அத்தை. ''நான் பேசுவது ஆன்மீகப் பண்புகளைப் பற்றி. நம் அகநிலையை ஆன்மீகப்பண்புகள் மூலம் உயர்த்திக் கொண்டால், அந்தப் பண்புகள் மூலமாக நாம் பிரபஞ்சத்தையே கூட அடையலாம்'' என்றார் வேணு மாமா.

''எனக்கு அவ்வளவு பெரிய பேராசை எல்லாம் இல்லை. அக நிலை என்றால் என்ன? அதை எப்படி உயர்த்துவது? நான் உடனே பண்ணக் கூடியது ஏதாவது இருந்தால் சொல்லுங்கள் மாமா'' என்று கேட்டாள் திவ்யா.

''நமக்குள் ஏராளமான பகுதிகள் உண்டு. உடல் மட்டுமே நாமில்லை. மனம், உள்மனம், ஆழ்மனம், உணர்வு, ஆன்மா என்று எத்தனையோ விஷயங்கள் நமக்குள் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கின்றன. அவற்றின் மொத்தத் தொகுப்புதான் நாம். இந்த



எல்லாப் பகுதிகளையும் நமக்குள் ஓர் இடத்தில் ஒன்று சேர்க்க முடியும். அதை அகநிலை என்று சொல்லலாம். அவ்வளவு பெரிய சிக்கல் நமக்கெதற்கு? நீ உடனே செய்யக் கூடியதைச் சொல்கிறேன். ஒவ்வொரு பகுதிக்கும் சில பண்புகள் உண்டு. அந்தந்தப் பகுதிக்கு உரிய உயர்ந்த பண்புகளை நாம் ஏற்றுக் கொண்டால் போதும். அக நிலை தானாகவே உயர்ந்து விடும்'' என்றார் வேணு மாமா.

''எரிச்சல் படாமல், இனிமையாக இருப்பது உணர்விற்கான பண்பு. என்ன நடக்குமோ என்ற எதிர்பார்ப்பின்றி, கண்டபடி யோசிக்காமல் இருப்பது மனதிற்கான பண்பு. சுத்தமாக இருப்பது உடலுக்கான பண்பு. இவர் சொல்லி இருக்கிறார். உயிருக்குப் பயப்படாத தைரியசாலிகளான கடத்தல்காரர்கள் தங்களுக்குள் அளவு கடந்து நேர்மையாகவும், உண்மையாகவும் இருப்பார்களாமே. ஒரு வேளை அந்தப் பண்புகள்தான் அவர்களுக்கு உதவுகின்றன போலும்'' என்றாள் திவ்யா.

''வேறு காரணங்களும் இருக்கலாம். அந்த ஆராய்ச்சியை விடு. எல்லாப் பண்புகளையும் ஏற்பது உயர்ந்தது என்றாலும், அது கஷ்டமான காரியம். ஏதோ ஒரு பண்பை முழுமையாக ஏற்க முயற்சி செய்யலாம் அல்லது பல பண்புகளைக் கொஞ்சம் கொஞ்சம் ஏற்றுக் கொள்ள முயற்சி செய்யலாம். இரண்டில் எதைச் செய்தாலும் பலனுண்டு. சுமுகம் பலமான பண்பு. குடும்பத்தில் கணவனோடு அல்லது மனைவியோடு இணக்கமாகவும், சுமுகமாகவும் குற்றங்கள் கண்டுபிடிக்காமல் கடமையில் எந்தக் குறையும் வைக்காமல் இப்போது செய்யும் வேலைகளைத் தொடர்ந்து செய்தால், எல்லா நன்மைகளும் தாமாகவே நம்மைத் தேடி வரும்'' என்றார் வேணு மாமா.

''இவருக்கு எந்த உருப்படியான பண்பும் இருப்பது போல எனக்குத் தெரியவில்லையே, எப்படி எல்லோரும் தாங்களாகவே வந்து இவருக்கு உதவி செய்கிறார்கள்?'' என்று திவ்யா

கேட்டாள். "ஒருவரது அகநிலையை அவரது வெளி வாழ்க்கை முகம் பார்க்கும் கண்ணாடி போல பிரதிபலித்துக் காட்டும். என்ன பண்புகள் சேகருக்கு உண்டு என்பது அதற்குரிய நேரம் வரும்போது செயலாகத் தெளிவாகத் தெரியும்" என்றார் வேணு மாமா.

''நாம் நான்கைந்து இடத்துக்கு அலைந்து, நான்கைந்து பேர்களைப் பார்த்து பல முயற்சிகள் செய்தால்தானே முன்னுக்கு வர முடியும்?'' கடைசி சந்தேகத்தைக் கேட்டாள் திவ்யா.

''அகநிலை மாறினால் தேவைப்படும் சந்தர்ப்பங்களை வாழ்க்கை தானாகவே உருவாக்கித் தரும். அகநிலையை உயர்த்துவது மட்டுமே நாம் செய்ய வேண்டிய முயற்சி" என்றார் வேணு மாமா.

''திவ்யா, அசட்டுத்தனமாக அகநிலையை மாற்றுகிறேன் என்று நேரத்தை வீணடித்து விடாதே'' என்று எச்சரிக்கை செய்தாள் கஸ்தூரி அத்தை. ''இல்லை அத்தை. நான் மாமா சொல்வது போல செய்து பார்க்கப் போகிறேன். இனி இவரைப் பற்றிக் குறை சொல்வதை விட்டு விட்டு, என்னால் முடிந்த வரை சுமுகமாக இருக்கப் போகிறேன்" என்றாள் திவ்யா. "இருந்திருந்து எனக்கு ஒரு சிஷ்யை கிடைத்தாள். அதையும் நீங்கள் கெடுத்து விட்டீர்களே! ஆமாம், இப்படியே தத்துவம் பேசிக் கொண்டிருங்கள். எனக்கு எத்தனை நாட்களாக முட்டி வலி இருக்கிறது? உங்களால் சரி செய்ய முடிந்ததா? சிறு தெய்வங்களைக் கும்பிடக் கூடாது என்ற உங்கள் பேச்சை மீற முடியாமல், ஆசை இருந்தாலும், இருபது வருடங்களாக நான் குல தெய்வத்திற்குப் பொங்கல் வைக்கவில்லை. அதனால்தான் இப்படிக் கஷ்டப்படுகிறேன். ஏதாவது சொன்னால் அறிவிலிகளுக்கு ஆன்மீக ஞானம் தர முடியுமா என்று கேலி செய்வீர்கள்'' கஸ்தூரி அத்தை மிகவும் வருத்தத்துடன் சொன்னாள்.



''சரி, சரி, புலம்ப ஆரம்பிக்காதே. ஆன்மீகம் வேறு, சாரமற்ற சம்பிரதாயம் வேறு. என்னால் விளக்கம்தான் தர முடியும். அவரவர் நோயை அவரவர்தான் தீர்க்க முடியும். நீ வருத்தப்படுவதைப் பார்த்தால் எனக்குச் சங்கடமாக இருக்கிறது. உன் திருப்திக்காக அடுத்த வாரமே நம் குல தெய்வத்திற்குப் பொங்கல் வைத்து விடலாம்'' என்று வரம் தந்த வேணு மாமா, கஸ்தூரி அத்தையின் மலரும் முகத்தைப் பார்த்துக் கொண்டே, புன்சிரிப்புடன் இரண்டு கைகளையும் தூக்கி சோம்பல் முறிக்க, அந்த விபரீதம் நிகழ்ந்தது.

கைப்பிடி தவறியதாலோ, விதியின் விளையாட்டாலோ பின்புறமாகச் சாய்ந்து விட்ட வேணு மாமா தலை கீழாக மேலிருந்து தண்ணீருக்குள் விழுந்தார். என்ன நடந்தது என்பது ஓரிரு வினாடிகளுக்குப் பின்புதான் கஸ்தூரிக்கும், திவ்யாவிற்கும் அறிவில் உறைத்தது. ''ஐயோ, காப்பாற்றுங்கள்!'' என்று இரண்டு பெண்களும் அலற, அடுத்த சில கணங்களுக்குள் ஒரு பெரிய கூட்டம் அங்கே கூடி விட்டது.

இரத்தக் கொதிப்பு சட்டென்று உயர்ந்து தலை சுற்றி கஸ்தூரி அத்தை மயங்கிச் சாய, அவரை திவ்யா தாங்கிப் பிடித்துக் கொண்டு, ''யாராவது மாமாவைக் காப்பாற்றுங்களேன்'' என்று கூட்டத்திலே இல்லாத வீரனுக்குக் குரல் கொடுத்தாள். அவள் தன்னைப் பார்த்து அப்படிச் சொல்லவில்லை என்று கூட்டத்திலே இருந்த ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக நம்பினர்.

"நீரில் மூழ்கும்போது நீருக்கு மேலே மூன்று தடவை தலை தெரியுமாம். அதற்கப்புறம் உடல்தான் கிடைக்குமாம். இதுவரை ஒரு தடவைதான் தலை தெரிந்திருக்கிறது'' என்று எண்ண ஆரம்பித்தார் ஒருவர். ''அதெல்லாம் விஞ்ஞான பூர்வமாக நிரூபணமாகாத கட்டுக்கதை" என்று அபிப்பிராயம் தெரிவித்தார் ஓர் அறிவியல் ஆர்வலர். ''ஏம்பா, நிறைய இரத்தம் வருமா?'' என்று ஒரு சிறுவன் சந்தேகம் கேட்டான். ''சேச்சே, நீரில்

மூழ்கினால் இரத்தம் வராது. நீருக்குள் கல், கட்டை இருந்து அடிபட்டால் இரத்தம் வரலாம்'' என்று மகனுக்குத் தந்தை ஞானோபதேசம் செய்தார். ''யாராவது போலீசுக்கு அல்லது ஆபத்துதவிக்குப் போன் பண்ணுங்களேன்'' என்று ஒரு பெண்மணி உருப்படியான யோசனை சொல்ல, ''பண்ணியாகி விட்டது. ஆனால் அவர்கள் வருவதற்குள் எல்லாம் முடிந்து விடும்'' என்றார் இன்னொரு பெண்மணி.

இந்த ஆரவாரங்கள் எதுவும் காதில் விழாமல், காவிரி நீரலைகளிலும், அவை எழுப்பி விட்ட நினைவலைகளிலும், தன்னை இழந்து காவிரி நீரையே பார்த்துக் கொண்டிருந்த சேகரின் கண்களில் திடீரென்று உயிருக்கு மன்றாடும் முகமொன்று ஒரு வினாடி தோன்றி பின் மீண்டும் நீருக்குள் மறைந்தது.

அடுத்த கணம் பாதுகாப்புக் கைப்பிடிச் சுவரில் ஏறிய சேகர், காவிரியில் குதித்தான். தண்ணீரில் ஏதோ விழுந்த சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்த கூட்டத்தினரை, அடுத்து என்ன நடக்குமோ என்ற பரபரப்பும், ஆர்வமும் தொற்றிக் கொண்டது. சிலர் சேகரின் தைரியத்தைப் பாராட்டினர். சிலர் அது அறிவற்ற முரடனின் குருட்டு தைரியம் என்றனர். சேகர் ஆழமான நீர்ப் பகுதியில் குதித்ததைக் கண்டு நெஞ்சமெல்லாம் பதறிய ஒரே ஜீவன் அவன் மனைவி திவ்யா மட்டுமே.

சிறிது நேரம் தண்ணீருக்குள் தடுமாறிய சேகர், தத்தளித்துக் கொண்டிருந்த வேணு மாமாவைப் பார்த்து விட்டான். அவரை இறுக்கமாகப் பற்றிக் கொண்டு கரையை நோக்கி சிரமப்பட்டு மெல்ல நீந்தினான். பத்து நிமிடப் பெரும் போராட்டத்திற்கு பின் ஒரு வழியாக இருவரும் கரை சேர்ந்தனர். நல்ல வேளையாக வேணு மாமா நீரைக் குடிக்காததினாலும், சுய நினைவை இழக்காததினாலும், அவராகவே தட்டுத் தடுமாறி எழுந்து, கைத்தாங்கலாக சேகரைப் பிடித்துக் கொள்ள, இருவரும் மெல்ல படிகளில் ஏறி மேம்பாலத்திற்கு வந்து சேர்ந்தனர்.



''ஆழம் அதிகமில்லை. அதனால்தான் தப்ப முடிந்தது'' என்றார் ஒருவர். "இன்று நீரோட்டம் மெதுவாகத்தான் இருந்தது" என்றார் மற்றொருவர். "கெட்டது எதுவும் நடக்காது என்று நான் அப்போதே நினைத்தேன்" என்றார் இன்னொருவர்.

''ஈரத் துணியை அப்புறம் மாற்றிக் கொள்கிறேன்'' என்று சொல்லிவிட்டு, யாரிடமும் வேறு எதுவும் பேசாமல் அங்கிருந்த ஒரு கல் பெஞ்சில் சாய்ந்து படுத்து ஆசுவாசப் படுத்திக் கொண்டார் வேணு மாமா.

சேகரின் உடைகளைக் கழற்றி, நன்றாகப் பிழிந்து உலர வைத்தாள் திவ்யா. யாரோ ஒரு பெண் நீட்டிய துண்டால் தன் தலையை துவட்டிய வண்ணம், பழைய இடத்தில் போய் உட்கார்ந்து கொண்ட சேகர் மீண்டும் காவிரி நீரையே பார்க்கத் தொடங்கினான்.

மயக்கம் தெளிந்த கஸ்தூரி அத்தைக்கு, வேணு மாமா உயிரோடு இருப்பதைப் பார்த்த பின்தான் மீண்டும் உயிரே வந்தது. அவர் அருகில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்த அத்தை, எழுந்து காருக்குச் சென்றார். ஒரு கோப்பை நிறைய தேநீரையும், வேணு மாமாவிற்காக விசேஷமாக தயார் செய்து சூடு காக்கும் பாத்திரத்தில் கொண்டு வந்திருந்த இரவா கேசரியையும், மசால் வடைகளையும் ஒரு தட்டில் நிறைத்துக் கொண்டு, வேணு மாமாவைத் தாண்டி நடந்தார் கஸ்தூரி அத்தை.

''இப்படிக் கொடு. நான் இங்கே படுத்துக் கொண்டிருக்-கிறேன்'' என்று குரல் கொடுத்தார் வேணு மாமா.

"நான் சேகருக்கு இவற்றைக் கொடுத்து விட்டு வருகிறேன். நம்மால் இந்த மாதிரி பொருட்களைத்தான் பிறருக்குத் தர முடியும். சேகர் போன்ற அகநிலை இருப்பவர்களுக்குத்தான் மற்றவர்களுக்காக உயிரையும் தர முடியும். தங்கமான பையன்! சென்னையில் நம் வீட்டைப் பத்து வருடங்களாக சும்மாத்தானே

பூட்டி வைத்திருக்கிறோம்? அதை சேகருக்கு வாங்கிய விலைக்கே கொடுத்து விட்டால் என்ன? சும்மா கொடுத்தாலும் தப்பில்லை. அதைப் பற்றி யோசித்துக் கொண்டு நீங்கள் கொஞ்ச நேரம் அப்படியே படுத்திருங்கள். வடைக்கும், கேசரிக்கும் என்ன அவசரம் உங்களுக்கு?'' என்றவாறு விடுவிடுவென்று சேகரை நோக்கி நடந்தார் கஸ்தூரி அத்தை.

வேணு மாமா திவ்யாவைப் பார்க்க, இருவரும் மனநிறைவுடன் புன்னகைத்துக் கொண்டனர்

*முற்றும்.*

❀❀❀

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

*சமர்ப்பணம் சரணாகதியில் முடியும்.*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

*நாம் அன்னையை அழைப்பது மனித முயற்சி.*
*தானே அன்னை நினைவு வருவது அருள்.*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

*நினைவு அழைப்பைத் தரும்.*



# அன்பர் கடிதம்

*அன்னையே சரணம்!*

எங்கள் பிரச்சனையைப் பற்றிக் கூறினோம். அப்பொழுது மதர்ஸ் சர்வீஸ் சொசைட்டியை சார்ந்த அன்பர், மதர் எங்களுக்கு காசோலை கொடுப்பதாக நினைத்து பிரார்த்தனை செய்யச் சொன்னார்கள். இந்நேரத்தில் தஞ்சை தியான மைய பொறுப்பாளர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். திண்டுக்கல் தியான மைய பொறுப்பாளர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என் தாயார் மைய ஆலோசனைப்படி மனமுருகி கதறி அன்னையிடம், ''தவறு என்னுடையது மட்டுமே'' எனப் பிரார்த்தனை செய்தார்கள். அதன் பிறகு மனம் அமைதி அடைந்ததாகவும், புல்லாங் குழலோசை கேட்டதாகவும் கூறினார்கள். என் தாயாரும், தங்கையும் மற்றும் தம்பியும் தரிசன நாட்களுக்கு மலர்கள் திருச்சியிலிருந்து வாங்கி வந்து தஞ்சை தியான மையத்திற்குச் சேவை செய்வார்கள். திருமதி. காஞ்சனா பாலு அவர்கள் தாயாரிடம், "சொத்தை எங்கு தொலைத்தாயோ அங்கு சென்று தேடு'' என்று கூறினார். என் தாயாரின் பெரிய அண்ணன் பையன் உதவியால் 1 மனை வாங்கினார்கள். 2007ஆம் ஆண்டு Februaryஇல் என் தந்தையாரின் முழு பென்சனும் மற்றும் 100% settlementஉம் அன்னையின் அருளால் கிடைத்தது.

எனக்கு எங்கள் குடும்பத்தை ஏமாற்றிய மூத்த சகோதரர் மீது அளவு கடந்த கோபம் இருந்தது. மாம்பலத் தியான மையத்தின் சொற்பொழிவைக் கேட்டு, ஏமாற்றிய மூத்த சகோதரர் மீது இருந்த கோபத்தை மாற்றினேன். அன்னையின் கருணையால் அவரிடம் கொடுத்திருந்த 5 பவுன் நகை திரும்ப கிடைத்தது. அன்னைக்கும் பகவானுக்கும் இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இளைய தம்பி அன்னையின் அளப்பற்ற சக்தியால் உறவினரிடம் வாங்கிய கடனை அடைத்து அன்னை அறையுடன் கூடிய தரைத்தளம் மற்றும் முதல் மாடியுடன் கட்டிடம் கட்டி அதற்கு "அன்னை இல்லம்" என்று பெயரிட்டார். அந்நேரத்தில், மூத்த சகோதரர் ரூ.4 இலட்சத்தை இளையவரிடம் கொடுத்து மீதியைச் சிறிது காலத்தில் தருவதாக கூறினார். மூத்த சகோதரனை மாற்றிய அன்னைக்கு இந்நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என் தாயார் எல்லா தரிசன நாட்களுக்கும் தஞ்சை தியான மையத்திற்குச் சென்று விடுவார்கள். அங்கு ஒவ்வொரு வருடமும் நவம்பர் 22ம் தேதி முதல் 24ம் தேதி வரை நடைபெறும் அழைப்பில் கலந்து கொள்வார்கள். அப்பொழுது அன்னையின் சந்தோஷத்தை என் தாயார் அனுபவிப்பார்கள் என்று கூறினார்கள். மாம்பலம் தியான மையத்தைச் சென்னை வரும் பொழுதெல்லாம் தவறாது தரிசனம் செய்வார்கள்.

திரு. அசோகன் அண்ணா கொடுத்த **Daily Prayer**ஐ மாம்பலத் தியான மையத்தில் பெற்று படித்து விட்டு வீட்டிற்கு வந்த பொழுது தங்கையிடமிருந்து போன் வந்தது. மனைகள் திருச்சியில் இருப்பதாகவும் வந்து பார்த்து விட்டுச் செல்லுமாறும் பிடித்தால் வாங்கலாம் என்று கூறினார்கள். மூவரும் மனையை பார்வையிடச் சென்றோம். அங்குள்ள பணியாளரிடம், பிடித்தது என்றும் உடனே அட்வான்ஸ் தொகையைக் கொடுத்து புக் செய்ய சொன்னார்கள். சென்னையிலிருந்து வரும் பொழுது பணம் ஒன்றும் எடுத்து வரவில்லை. இந்நேரத்தில் இளைய சகோதரரும் சகோதரியும் 1 லட்சத்து இருபதாயிரம் ரூபாயை 1 மணி நேரத்தில் தயார் செய்து அட்வான்ஸை கட்டிவிட்டனர். அவர்களின் நல்லெண்ணத்தால் என் தங்கைக்கும் 1 மனையை எங்கள் மனையருகில் வாங்கிக் கொடுத்தார்கள். என் தம்பிக்கும் தங்கைக்கும் இந்நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

-- T. தமிழ்செல்வி, சென்னை.

❀❀❀



# அன்னை வழியில் சாதிப்பது

N. அசோகன்

மார்ச் மாதம் online conference call மூலம் மக்கள் அன்றாட வாழ்க்கையில் valueக்களின் உதவியைக் கொண்டும் மற்றும் power of organizationஐக் கொண்டும் எப்படிச் சாதிக்கலாம் என்று விளக்கமாகப் பேசினேன். இப்பொழுது அன்னை பக்தர்களுக்கு அன்னையிடம் அவர்கள் வந்து விட்டார்கள் என்ற காரணத்தால் அன்னையின் அருள் அவர்கள் வாழ்க்கையில் செயல்படக்கூடிய வாய்ப்பு இருப்பதால் எத்தகைய சாதனைகளையெல்லாம் அவர்களால் நிகழ்த்திக் கொள்ள முடியும் என்பதைப் பற்றிப் பேச விரும்புகிறேன். அன்னையின் அருளின் சிறப்பைப் பற்றி அப்பா ஸ்ரீ கர்மயோகி அவர்கள் 1980 வாக்கில் முதன்முதலாக எழுத ஆரம்பித்தபொழுது மற்ற கடவுள்களிடம் தங்களுக்குள்ள தீராத பிரச்சனைகள் பற்றி பக்தர்கள் வைத்து பலிக்காத பிரார்த்தனைகளை அன்னையிடம் வைத்தால் அவற்றைப் பலிக்க வைக்கும் அளவிற்கு விசேஷ சக்தி வாய்ந்தது அன்னையின் அருள் என்று குறிப்பிட்டிருந்தார். அன்னையின் அருளைப் பற்றி எழுதும்பொழுது டாக்டர்களால் குணப்படுத்த முடியாது என்று கைவிடப்பட்ட நோயாளிகள் அன்னையின் அருளை வேண்டி பிரார்த்தனை செய்தபொழுது அந்தத் தீராத நோய்கள் குணமடைந்ததாக எழுதினார். மேலும் தன்னால் திருப்பித் தர முடியாத அளவிற்குக் கடன் சுமையைக் ஏற்றிக் கொண்டவர்கள் அன்னை பக்தர்களாக மாறியபொழுது அந்தக் கடன் சுமையிலிருந்து விடுபடும் அளவிற்குப் புதிய அதிக வருமானத்தைப் பார்த்ததாகவும், முப்பத்தைந்து வயதாகியும் திருமணம் கூடி வராமல் ஏங்கிக் கொண்டிருந்த முதிர் கன்னிகளுக்கு அன்னையிடம் வந்த பிறகு அவருடைய

அருளால் உடனே எதிர்பாராதவிதமாக திருமணங்கள் கூடி வந்ததாகவும், எந்த வேலையிலும் நீடித்து நிற்க முடியாதவர்களுக்கு அன்னையிடம் வந்த பிறகு இது வரையிலும் இல்லாத பொறுப்புணர்வு வந்து ஒரு நல்ல வேலையைத் தக்க வைத்துக் கொண்டிருப்பதாகவும், பல வருடங்களாகச் சொத்துத் தகராறு நிலவி வந்த கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் அன்னை பக்தராக மாறி அன்னைக்குச் சுமுக மலர்களை வைத்ததன் பலனாக நீண்ட காலச் சொத்துத் தகராறு முடிவுக்கு வந்து சுமுகம் பிறந்ததாகவும் என்றிப்படி பல உண்மை நிகழ்ச்சிகள் நடந்துள்ளன என்பதையும் அவருடைய புத்தகங்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

நீண்ட காலப் பிரச்சனைகளுக்கு உடனடி நிவாரணத்தை அன்னையின் அருளால் கொடுக்க முடியும் என்பது அன்னையிடம் புதிதாக வந்த அன்பர்களுக்கு வியப்பாகவும் புரியாத புதிராகவும் இருக்கலாம். ஆனால் அன்னை மற்றும் பகவானுடைய ஆன்மீக சிறப்புகளை உணர்ந்த விவரமறிந்த அன்பர்களுக்கு அன்னையுடைய சக்தி சத்திய ஜீவிய சக்தி என்பதால் இத்தகைய அற்புதங்களை அதனால் அதிவேகத்தில் நிகழ்த்த முடிகிறது என்பது புரியும் என்பதால் அவர்களுக்கு ஆச்சரியம் இருக்காது. அப்பா அவர்கள் அன்னையின் அருளின் வேகத்தை மின்னல் வேகத்திற்கு ஒப்பிடுகிறார். அதாவது அன்னையிடம் வைத்த பிரார்த்தனைக்குண்டான பலன் ஒரு சில நிமிடங்களில் வந்து விடுகிறது என்கிறார். அன்பர்களுடைய வீடுகளிலும் அவர்கள் பணியாற்றும் அலுவலகங்களிலும் மின் சப்ளை தடைபடும்பொழுது அன்னையிடம் அது பற்றி பிரார்த்தனை செய்த அடுத்த நிமிடமே மின் சப்ளை மீண்டும் வருவதைப் பல அன்பர்கள் பார்த்துள்ளார்கள். அம்மாதிரியே பணம், கை கடிகாரம், பேனா, மூக்குக்கண்ணாடி மற்றும் முக்கியமான ஆவணங்கள் (documents) ஆகியவை வைத்த



இடம் தெரியாமல் ஒரு மணி நேரத்திற்கு மேலாக தேடிவிட்டு பின்பு அன்னை நினைவு வந்து அன்னையிடம் அது பற்றிச் சொன்னவுடன் அதுவரை கண்ணில் படாத பணம் மற்றும் பொருட்கள் உடனே கண்ணில் படுவது போன்ற நிகழ்ச்சிகளும் பல அன்பர்கள் வாழ்க்கையில் நடந்துள்ளன. இப்படி உடனடி பலன் கிடைக்கிறது என்பது பொதுவான ஒரு உண்மையாக இருந்தாலும் எங்களுக்கு இம்மாதிரி அன்னையிடம் சொன்னவுடனேயே கரண்ட் மீண்டும் வருவதில்லை, தொலைந்த பொருள் உடனே கிடைப்பதில்லை என்று சொல்கின்ற அன்பர்களும் இருக்கின்றார்கள். இப்படிச் சிலருக்கு உடனடியாக பலன் கிடைப்பதில்லை என்பது அருளுக்கு இத்தகைய மின்னல் வேக ஆற்றல் இல்லை என்ற அர்த்தத்தைத் தாராது. மாறாக அருளால் மின்னல் வேகத்தில் பலனைத் தரமுடியும் என்ற நம்பிக்கை சம்பந்தப்பட்ட அன்பருக்கு இல்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. வேலை வேண்டும் என்ற பிரார்த்தனை மற்றும் வருமான உயர்வு, திருமண சம்பந்தம், வீடு கட்டுதல், வீடு வாங்குதல் மற்றும் புதிய தொழில் project தொடங்குதல் ஆகியவை சம்பந்தமாக செய்யப்படும் பிரார்த்தனைகள் பலிப்பதற்கு நிறைய கால அவகாசம் தேவைப்படுவது போல் நமக்குத் தெரிகிறது. இங்கேயும் அப்பா அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், எப்படிப் பிரார்த்தனை தடைப்பட்ட மின்சப்ளையை உடனடியாகக் கொண்டு வருகிறதோ, கண்ணில் படாமல் நம்மை அலைய வைக்கும் பணமும் பொருளும் அன்னையிடம் சொன்ன உடன் எப்படி கண்ணில் படுகிறதோ அதே மின்னல் வேகத்தில் தான் வேலை, வருமானம், திருமணம், வீடு கட்டுதல் போன்ற பெரிய விஷயங்களுக்கான பிரார்த்தனைகளுக்கும் அன்னை பதிலளிக்கிறார் என்கிறார். அதாவது பிரார்த்தனை செய்கின்ற அன்பரிடம் அன்னை எதிர்பார்க்கும் அளவிற்கு சின்சியரிட்டியும் பிரச்சனையின்

கடுமைக்கேற்ற தீவிரமும் அதாவது intensityயும் இருந்ததென்றால் அன்னை வழங்கும் responseஉம் மின்னல் வேகத்தில் தான் கிடைக்கிறது என்கிறார். நமக்குச் சூட்சும பார்வை இல்லாததால் சூட்சும நிலையில் இந்த மின்னல் வேக response கிடைப்பது தெரியவில்லை. நாம் பிஸிக்கல் லெவலில் காலம் மற்றும் இடம் (time and space) ஆகியவற்றிற்குக் கட்டுப்பட்டும் இவற்றை மீறி செயல்பட முடியாது என்று நம்பிக் கொண்டும் செயல்படுவதால் அருளின் மின்னல் வேகச் செயல்பாடு நம்முடைய தாழ்ந்த மற்றும் அறிவில்லாத மனநிலைக்கு ஏற்றவாறு தீவிரம் குறைந்து கால தாமதம் என்ற நியதிக்குட்பட்டு போதுமான கால இடைவெளிக்குப் பின்னர் தான் பலனாக நமக்குத் தெரிய வருகிறது. ஆனால் பெரிய விஷயங்களிலாவது இப்படிப்பட்ட தாமதமான responseஐ சந்தித்தே ஆக வேண்டும் என்ற அவசியமே இல்லை என்று அப்பா அவர்கள் சொல்கிறார். அவர் ஏன் அப்படிச் சொல்கிறார் என்றால் அதற்கான பதில் பகவானுடைய லைப் டிவைன் புத்தகத்தில் இருக்கின்ற பிரம்மன், புருஷா, ஈஸ்வரா என்ற படலத்தில் இருக்கிறது. இந்தப் படலத்தில் பகவான்அவர்கள் Time Eternity, Timeless Eternity மற்றும் இந்த இரண்டு நிலைகளும் ஒன்று சேர்ந்த மூன்றாம் நிலைக் காலமான Simultaneous Integrality என்ற மூன்று கால நிலைகளைப் பற்றி குறிப்பிடுகிறார்.

நாம் Time planeஇல் செயல்படுகிறோம் என்பதால் நாம் எந்த வேலையைச் செய்தாலும் அதற்குண்டான பலன் தெரிவதற்கு நமக்குக் கால அவகாசம் தேவைப்படுகிறது. ஒருவர் ஒரு கம்பெனியை நிறுவி ஒரு பிஸினஸ் செய்ய விரும்புகிறார் என்றால் அந்தக் கம்பெனியை நிறுவுவதற்குண்டான வேலைகளைச் செய்து என்ன பொருளை விற்க விரும்புகின்றாரோ அதை உற்பத்தி செய்தோ, வரவழைத்தோ



வைத்துக் கொண்டு விற்பனையைச் செய்து வருமானத்தைப் பார்ப்பதற்குள் குறைந்தபட்சம் ஒரு மாத காலமாவது ஓடி விடுகிறது. ஒரு நாள் காலையில் பிஸினஸ் ஆரம்பிக்க விரும்பியவர் அந்தக் காலைப் பொழுதிலேயே இடத்தை ஏற்பாடு செய்து தேவைப்பட்ட பொருட்களையும் தயார் செய்து மதியமே விற்பனை செய்து மாலைப் பொழுதிலேயே நல்ல வருமானத்தைப் பார்த்து விட்டார் என்ற மின்னல் வேக நிகழ்ச்சிகளைப் பொதுவாக நாம் பார்ப்பதில்லை. வேண்டுமென்றால் வீட்டுத் தோட்டத்திலுள்ள தென்னை மரத்தில் விளைந்த தேங்காய்களைக் காலையில் பறித்து வீட்டுத் திண்ணையில் வைத்து உடனடியாக விற்பனை செய்து ஒரு வருமானத்தைப் பார்க்கலாம். அப்பொழுதும் தென்னை மரத்திலேறி தேங்காய்களைப் பறிப்பதற்கு அரை மணி நேரமாவது செலவாகும். ஆனால், பத்து, இருபது இலட்சம் முதலீடு செய்யக்கூடிய ஒரு வியாபாரத்தைப் பற்றி காலையில் சிந்தித்து உடனடியாக அமல்படுத்தி அன்று மாலைக்குள்ளாகவே வருமானத்தைப் பார்த்துவிட்டதாக நாம் பொதுவாக கேள்விப்படுவதில்லை.

அம்மாதிரியே ஒரு விவசாயி வயலில் நெல் விதைத்து பயிர் செய்யத் தொடங்கினார் என்றால் நெல் முளைத்து வளர்ந்து நெல் மணிகள் தோன்றி அறுவடைக்குத் தயார் ஆன பிறகுதான் அறுவடை செய்து அதை விற்று ஒரு வருமானத்தைப் பார்க்க முடியும். இதற்கிடையில் மூன்று மாதங்களாவது ஓடி விடும். அம்மாதிரியே காலி இடத்தில் ஒருவர் வீடு கட்டத் தொடங்கினால் கட்டுமானப் பணிகள் முடிந்து அவ்வீட்டுக்குள் முறையாக அவர் குடி போக வேண்டுமென்றாலும் அதற்கும் ஓரிரு மாதங்கள் கால அவகாசம் நிச்சயம் தேவைப்படும். ஆகவே Time planeஇல் நாம் செயல்பட்டுக் கொண்டிருக்கும் வரையிலும் காலத்தாலும் இடத்தாலும் நாம் கட்டுப்பட்டுத்தான் இருக்க

வேண்டும். அப்பட்சத்தில் செய்த வேலைக்கு உடனடியாக பலனைப் பார்ப்பதென்பது physical levelலில் பெரும்பாலும் முடியாத காரியமாகி விடுகிறது. தவம் செய்யும் தபஸ்வி மற்றும் ரிஷிகளை எடுத்துக் கொண்டால் தியானத்தில் லயித்துத் தன்னை மறந்த நிலையில் இருக்கும்பொழுது அவர்களுக்கு நேரம் போவதே தெரியாமல் இருந்து விடுகிறது. பல நாள் தியானத்தில் இருந்து விட்டு கண் விழித்துப் பார்க்கும்பொழுது நாலைந்து நாளோ ஒரு வாரமோ ஓடி விட்டது அவர்களுக்குத் தெரிவதில்லை. அதாவது தன்னை மறந்த நிலையில் தியானத்தில் இருந்தபொழுது அவர்கள் அச்சமயத்தில் காலத்தைக் கடந்த நிலையில் இருந்திருப்பதாக அர்த்தம் செய்து கொள்ள முடியும். அதனால் தான் பல நாட்கள் கழிந்த பின்னரும் ஏதோ ஒரு சில மணி நேரம் தான் செலவாகி இருக்கும் என்று அவர்களுக்குத் தோன்றுகிறது. அன்னையை நினைத்து பன்னிரண்டு மணி நேரம் calling செய்யும் அன்பர்கள் இருக்கிறார்கள். இவர்களும் தியானத்தில் லயித்துத் தன்னை மறந்த நிலையில் இருக்கும் பொழுது பன்னிரண்டு மணி நேரம் போனது அவர்களுக்கு ஏதோ ஓரிரு மணி நேரங்கள் போனதாகத் தான் தோன்றுகிறது. ஆகவே இவர்களும் calling செய்து கொண்டிருந்த நேரத்தில் Time planeஇல் இருந்து விடுபட்டு Timeless planeக்கு போய்விட்டார்கள் என்று தான் அர்த்தமாகும். நாமும் ஒரு காரியத்தை அனுபவித்து செய்து கொண்டிருக்கும் பொழுது நமக்கும் கூட நேரம் போவதே தெரிவதில்லை. அந்த நேரத்தில் நாமும் காலத்தைக் கடந்த நிலைக்குத் தான் செல்கிறோம். ஒரு நல்ல திரைப்படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது நாம் அப்படத்துடன் ஒன்றிப் போய்விடுகின்றோம். மூன்று மணி நேரத்திற்கு பிறகு திரைப்படம் முடிவுக்கு வரும்பொழுது நமக்கு மூன்று மணி நேரம் போனதே தெரிவதில்லை. ஏதோ அரை மணி நேரம் தான் திரைப்படம் ஓடியது போலத் தோன்றுகிறது.



பள்ளி விடுமுறை நாட்களைப் பொதுவாக சிறுவர் சிறுமியர்கள் விளையாட்டிலேயே கழித்து விடுவார்கள். ஒரு மாத விடுமுறை முடிவுக்கு வரும்பொழுது ஏதோ ஒரு வாரம் தான் கழிந்திருப்பது போல சிறுவர் சிறுமியர் உணர்வார்கள். ஆக அந்த விடுமுறை நாட்களில் அவர்கள் காலத்தைக் கடந்த நிலையில் இருந்ததாக நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இப்போது நாம் அன்னைக்கு வருவோம். அன்னை அவர்கள் காலமும் காலத்தைக் கடந்த நிலையும் என்ற இந்த இரு நிலைகளும் ஒன்றாக கூடி இருக்கின்ற Simultaneous Integrality என்ற மூன்றாம் நிலை Time planeஇல் இருக்கிறார்கள். நம்மைப் போல் மானுட உருவம் எடுத்து பூமியில் அவர்கள் அவர்களுடைய ஆயுட் காலத்தில் நடமாடினார்கள் என்றாலும் நம்மைப் போல காலத்திற்கும் இடத்திற்கும் அவர்கள் கட்டுப்பட்டு இயங்கவில்லை. அதாவது Time planeஇல் அவர்கள் செயல்பட்ட காலத்திலும் காலத்திற்குக் கட்டுப்படாமல் செயல்பட்டார்கள். அதே சமயத்தில் படைப்போடு தொடர்பே இல்லாமல் காலத்தைக் கடந்த நிலையில் இருக்கின்ற பரப்பிரம்மத்தைப் போல் பூவுலகத் தொடர்பில்லாமல் ஒதுங்கியும் இருக்கவில்லை. அவர் இஷ்டப்பட்டிருந்தால் மானிட அவதாரமே எடுக்காமல் தன்னுடைய காலம் கடந்த நிலையிலேயே இருந்திருக்கலாம். ஆனால் மானிட இனத்தின் மேலும், மற்றும் உலகில் உள்ள மற்ற ஜீவராசிகளின் மேலும் கொண்ட பரிவின் காரணமாகவும் பூவுலக வாழ்க்கையை இறைமயமாக்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவும் அவர் இருக்கின்ற உயர்ந்த நிலையிலிருந்து இறங்கி வந்து physical planeஇல் மானுட வடிவமெடுத்து நம்மோடு நடமாடினார். அப்படி மானிட வடிவம் வாங்கி வந்ததால் அவர் தம் தெய்வீக நிலையையோ அதற்குண்டான தெய்வீக சக்தியையோ எதையும் இழக்கவில்லை. Physical

planeஇல் நடமாடிக்கொண்டிருந்தபொழுது கூட தன்னுடைய சொந்த இருப்பிடமான சத்திய ஜீவிய நிலையோடு ஒரு தொடர்பை வைத்துக் கொண்டுதான் இருந்தார். ஆகவே அன்னையைப் பொறுத்த வரையில் ஒரே சமயத்தில் காலம் மற்றும் காலத்தைக் கடந்த நிலை என்ற இரண்டு நிலைகளையும் உள்ளடக்கிய பகவான் குறிப்பிடுக்கின்ற Simultaneous Integrality என்ற planeஇல் தான் அவர்கள் செயல்படுகிறார்கள். இந்த Time planeஇல் result என்பது உடனடியாக வருகிறது. ஏனென்றால் Timeless planeஉம் Time planeஉம் அருகருகே இருப்பதால் Timeless planeக்கு உண்டான உடனடி resultஐக் கொண்டு வருகின்ற சக்தி அந்த ஆற்றல் இல்லாத Time planeற்கும் தானாக வந்து விடுகின்றது.

ஒரு வாழ்க்கை சூழ்நிலையை உதாரணமாக எடுத்துச் சொன்னால் இது உங்களுக்கு நன்றாகப் புரியும் என்று நினைக்கிறேன். ஒரு M.L.A. அல்லது M.P. போன்ற செல்வாக்கு வாய்ந்த அரசியல்வாதியை எடுத்துக் கொள்வோம். அவருக்கு வீடு கட்டிக் கொள்வதற்கு Town Planning Authorityஇல் ஒரு order வேண்டும் அல்லது மின்துறையிலிருந்து அவருடைய வீட்டிற்கு three phase power supply connection கொடுப்பதற்கான order வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். இவருக்கு அரசியல் பலமிருப்பதால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை phoneஇல் தொடர்பு கொண்டு தான் யாரென்று தெரியப்படுத்தி தனக்கு இப்படி ஒரு order வேண்டுமென்று கேட்டாலே போதும். மற்ற சாதாரண குடிமக்கள் நடையாய் நடந்து ஒரு மாதமாவது காத்திருந்து அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து வாங்க வேண்டிய orderஐ ஒரு phone call போட்டு அன்றைக்கே வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுக்கும்படி செய்து கொள்கிறார். அதாவது ஒரு மாத வேலையை ஒரு நாளில் முடித்துக் கொள்கிறார். ஒரு மாதத்தை ஒரு நாளாக



சுருக்குவதென்பது Time planeஐ Timeless planeஆக ஆக்குவதற்குச் சமம். இப்பொழுது M.L.A.வின் உறவினர் ஒருவருக்கு இப்படி ஒரு order Town Planning Authorityயிலிருந்தோ அல்லது மின்துறையிலிருந்தோ வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். அவர் M.L.A.வின் உறவினர் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ளாமல் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் சென்றார் என்றால் அவரும் சாதாரண குடிமக்களைப் போல் நடையாய் நடந்து பணத்தை செலவழித்துதான் orderஐ வாங்க முடியும். ஆகவே அப்படி காத்திருக்க விரும்பாத உறவினர் M.L.A.இடமிருந்து recommendation letter வாங்கிக் கொண்டு அந்த officeக்குச் சென்று தான் யார் என்பதைத் தெரியப்படுத்தி letterஐ கொடுக்கிறார். M.L.A.வின் உறவினர் இவர் என்று அவர்களுக்குத் தெரியும் போது எப்படி M.L.A.விற்கு உடனடியாக வேலையை முடித்துக் கொடுத்தார்களோ அதே வேகத்தில் இவருக்கும் வேலையை முடித்துக் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே M.L.A. கூட இருப்பதால் M.L.A. அனுபவிக்கும் உடனடி ரிசல்ட் என்பதை இவரும் சேர்ந்து அனுபவிக்கின்றார். இந்த உதாரணத்தைச் சொல்லும்போது எப்படி இந்த Time planeஉம் Timeless planeஉம் கலந்து இருக்கின்ற மூன்றாம் நிலை காலத்தில் உடனடி ரிசல்ட் கிடைக்கின்றது என்பது உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். அன்னை இந்த மூன்றாம் நிலை காலத்தில் இருப்பதால் நாம் நம் பிரச்சனைகள் விஷயமாக பிரார்த்தனை செய்யும்பொழுது நமக்கும் நம் பிரச்சனைகளுக்கும் இந்த உடனடி ரிசல்ட் கிடைக்கும் மூன்றாம் நிலை காலத்துடன் தொடர்பு கிடைத்து விடுகிறது. அதன் விளைவாக நம்முடைய பிரச்சனைகளுக்குண்டான தீர்வு உடனடியாக கிடைத்து நம் வாழ்க்கையில் ஏதோ miracle நடந்து விட்டது போல நமக்கு

ஒரு அதிசயமும் ஆச்சர்யமும் வியப்பும் வருகிறது. பல வருடங்களாக வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருந்தவர் அன்னையிடம் தன்னுடைய வியாதியைப் பற்றிப் பிரார்த்தனை செய்யும்பொழுது அது ஒரு சில நாட்களில் குணமடைவது கண்டு அதிசயித்துப் போகிறார். இம்மாதிரியே நெடுங்காலமாக தீராத கடன், நெடுங்காலமாகக் கிடைக்காத promotion, நெடுங்காலமாகக் கூடி வராத திருமண சம்பந்தம் ஆகியவை நாம் அன்னையுடன் தொடர்பு கொள்ளும் போது உடனடியாகக் கூடி வருவது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. நாம் காலத்தால் கட்டுண்டிருந்தாலும் நம் பிரச்சனைகளை அன்னைக்குத் தெரிவிக்கும்போது அன்னைக்குண்டான உடனடி ரிசல்ட் என்ற அம்சம் அன்னையோடு உள்ள தொடர்பின் காரணமாக நம் வாழ்க்கைக்குள்ளும் வந்துவிடுகிறது.

அன்னையிடம் வந்தபிறகு ஓரிரு வருடங்களிலேயே மாதம் சில ஆயிரம் சம்பாதித்துக் கொண்டிருந்த அன்பர்கள் மாதம் சில இலட்சங்கள் வருமானமாக பார்க்கக்கூடிய அளவிற்கு வளர்ந்து விடுகிறார்கள். அன்னையின் ஜீவியம் காலத்தைச் சுருக்குகிறது என்பதால்தான் இப்படிப்பட்ட அன்பர்களால் ஓரிரு வருடங்களிலேயே இப்படி ஒரு வருமான உயர்வைப் பார்க்க முடிகிறது. இப்படி ஒரு வருமான உயர்வை அனுபவித்த அன்பர்கள் மற்ற அன்பர்களிடம் பேசும்பொழுது, ‘‘அன்னையிடம் வந்திருக்காவிட்டால் இப்படி ஒரு வருமான உயர்வை இவ்வளவு குறுகிய காலத்தில் நான் பார்த்திருக்கவே முடியாது. பதினைந்து அல்லது இருபது வருடங்கள் கடினமாக நான் உழைத்த பிறகுதான் இப்படிப்பட்ட வருமான உயர்வு எனக்குக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஒரு வேளை கிடைக்கலாம் அல்லது கிடைக்காமலும் போகலாம்’’ என்று சொல்வார்கள். மேலும் இம்மாதிரியே சுலபமாக சீக்கிரமாக கிடைக்காத சில government orderகள் சம்பந்தப்பட்ட அன்பர்கள் அன்னையிடம்



இது பற்றிய பிரார்த்தனையை வைத்த பிறகு உடனே ஒரு சில நாட்களிலோ அல்லது ஒரு வாரத்திலோ கைக்குக் கிடைப்பதையும் பார்த்திருக்கிறார்கள். நான் இது வரையிலும் அன்னையினுடைய அருளாற்றல் எப்படி விசேஷமானது, அது கொண்டு வரும் பலன்கள் எப்படி நம்மைப் பிரமிக்க வைக்கிறது என்றெல்லாம் விளக்கிச் சொன்னேன். இப்பொழுது அன்னையோடு நாம் எப்படியெல்லாம் தொடர்பு கொள்ளலாம், அவருடைய அருளை எப்படியெல்லாம் பெற்று பயன்படுத்திக் கொள்ளலாம் என்று விபரமாகப் பேச விரும்புகிறேன்.

1. **முதலாவதாகவும் அன்பர்களால் மிகவும் சுலபமாகவும் கையாளக்கூடிய அணுகுமுறை என்னவென்றால் தம்முடைய பிரச்சனைகளைப் பற்றி அன்னைக்குப் பிரார்த்தனை செய்து அவருடைய அருளால் தனக்குத் தீர்வு வேண்டும் என்பதை அவரிடம் கேட்பது தான்.**

ஆரம்ப நிலையில் இருக்கும் பெரும்பாலான அன்பர்கள் இப்படித்தான் அன்னையை அணுகுகிறார்கள். அதாவது ஒரு குறிப்பிட்ட பலனை வேண்டி ஒரு குறிப்பிட்ட பிரார்த்தனையை அன்னையிடம் வைக்கிறார்கள். இந்தப் பலன் கிடைக்கும் பொழுது அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். பிரார்த்தனை செய்யும் பொழுதே பல ஆரம்ப நிலை பக்தர்கள் அன்னைக்குக் காணிக்கையையும் கொடுத்து விடுகிறார்கள். ஒரு சிலர் பிரார்த்தனை பலித்து கைமேல் பலனைப் பார்த்த பிறகு அன்னைக்கு நன்றி அறிதலாகக் காணிக்கையை வழங்குவதும் உண்டு. இப்படிப்பட்ட பிரார்த்தனைகள் பலதரப்பட்டவை. வியாதி குணமாக வேண்டும், நல்ல வேலை மற்றும் வருமானம் கிடைக்க வேண்டும், நல்ல பள்ளி மற்றும் கல்லூரியில் admission கிடைக்க வேண்டும், கடன் பாரம் தீர வேண்டும், சொந்தமாக வீடு அமைய வேண்டும் மற்றும் திருமண சம்பந்தம் கூடி வரவேண்டும் என்று இப்படி நாம் அடுக்கிக் கொண்டே

போகலாம். காணிக்கை கொடுப்பது மற்றும் பிரார்த்தனையைத் தினசரி அன்னையிடம் சொல்வது என்று இவை போக ஆரம்ப நிலை அன்பர்கள் கூடுதலாக அன்னைக்குகந்த மலர்களான Prosperity (நாகலிங்கப்பூ), Luck (அதிர்ஷ்டம்) மற்றும் Grace flower, சுமுக மலர்கள், பாதுகாப்பு மலர்கள் என்று இந்த மாதிரியான மலர்களைச் சேகரித்து அன்னைக்கு அர்ப்பணித்து இவ்வகையில் அருளின் செயல்பாட்டை விரைவுபடுத்துவதும் உண்டு. இது போக அன்னைக்குச் சுத்தம் பிடிக்கும் என்று தெரிந்து கொண்டு அன்பர்கள் தம்முடைய வீட்டின் சுத்தத்தை விசேஷ முயற்சி எடுத்து உயர்த்தி அவ்வகையில் அருளைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் உகந்த பாத்திரமாக தன்னை மாற்றிக் கொள்வதும் உண்டு. மேற்சொன்னவற்றைத் தாண்டி ஆரம்ப நிலையில் உள்ள அன்பர்கள் பொதுவாக தம்மை அன்னைக்கு உகந்தவராக மாற்றிக் கொள்ள விசேஷ முயற்சி எதுவும் எடுப்பதில்லை. அதாவது தன்னுடைய personalityஇல் உள்ள சோம்பேறித்தனம், பொய் சொல்வது, பொறாமைப்படுவது, பொறுப்பில்லாமல் நடந்து கொள்வது, அவசரம், பேராசை, பயம் போன்ற குணவிசேஷ குறைபாடுகளிலிருந்து விடுபடவோ அல்லது தன்னைத் திருத்திக் கொள்வதற்கோ seriousஆக எந்த முயற்சியும் எடுப்பதில்லை. மேலும் இந்த நிலையில் உள்ள அன்பர்கள் அருள் நிபந்தனையின்றி செயல்படும் என்று நம்புகிறார்கள். ஆகவே அவர்கள் எப்படி இருக்கிறார்களோ அப்படியே அன்னை அவர்களை ஏற்றுக் கொண்டு அருள்பாலிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அருள் நிபந்தனையின்றி செயல்படக் கூடியது என்ற அவர்களுடைய எதிர்பார்ப்பில் ஒரு உண்மையும் இருக்கிறது. அதாவது இப்படி நிபந்தனையின்றி அருள் செயல்படும்போது பிரார்த்தனை செய்யும் அன்பர்களுக்கு அருள் வழங்கும் குறைந்தபட்ச பலனாக நோய் குணமாவது, நல்ல வேலை மற்றும் நல்ல கல்லூரி



admission கிடைப்பது, தள்ளிப் போகும் திருமண சம்பந்தம் கூடி வருவது போன்ற பலன்கள் கிடைக்கும். அருளைப் பொறுத்தவரை இது குறைந்தபட்ச பலன் என்றாலும் சம்பந்தப்பட்ட அன்பர்களுக்கு இவையெல்லாம் மிகப்பெரிய பலன்களாகத் தெரிவதால் அவர்கள் இதிலேயே முழுத் திருப்தி அடைந்து விடுகிறார்கள். அதோடு விட்டு விடுகிறார்கள்.

2. **அன்பருக்கு உண்டான இரண்டாவது அணுகுமுறை அன்னையிடம் தன்னுடைய பிரச்சனைகளை surrender மற்றும் சமர்ப்பணம் செய்வது. பெரும்பாலான ஆரம்ப நிலை அன்பர்கள் இந்த அணுகுமுறையை மேற்கொள்வதில்லை. ஒரு சில சாதகர் நிலையில் உள்ள அன்பர்கள் மட்டுமே இந்த அணுகுமுறையை மேற்கொள்கிறார்கள். இந்த அணுகுமுறை மிகவும் சக்தி வாய்ந்தது என்பதால் சாதாரண பிரார்த்தனையை விட இந்த முறையில் அன்பர்களுக்குக் கிடைக்கக் கூடிய பலன்கள் பல மடங்கு பெரிதாக இருக்கும். ஆனால், பலன் பெரிது என்றாலும் அதற்கு ஈடாக அணுகுமுறையும் அந்த அளவிற்குக் கடினமானது தான். ஆகவே ஏதோ ஒரு சில அன்பர்கள்தான் இந்த அணுகுமுறைக்கு முன் வருகிறார்கள்.**

ஓர் அன்பர் பிரார்த்தனையை அன்னை முன் வைக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட பிரச்சனைக்கு ஒரு குறிப்பிட்ட தீர்வைக் கேட்கிறார். வியாதி உள்ளவர்கள் வியாதியிலிருந்து நிவாரணமும், வேலை இல்லாதவர்கள் நல்ல வேலையும், திருமணத்திற்காக காத்திருப்பவர்கள் நல்ல திருமண சம்பந்தத்தையும், வீடு இல்லாதவர்கள் சொந்தமாக ஒரு வீட்டையும் அன்னையிடம் கேட்பார்கள். அதாவது தனக்கு என்ன மாதிரி result வேண்டும் என்பதை அன்பர் ஏற்கனவே முடிவு செய்து கொள்வார். அந்த முடிவை அன்னைக்குத் தெரிவித்து அவருடைய அருளைப் பயன்படுத்தித் தான் விரும்பும் பலனைத் தனக்கு வழங்கச் சொல்வார். ஆனால்

சமர்ப்பணம் என்ற அணுகுமுறையை அன்பர் மேற்கொள்ளும் பொழுது அன்பர் தனக்கு இது தான் வேண்டும் என்று அன்னையிடம் வலியுறுத்துவது இல்லை. மாறாக, பிரார்த்தனைக்கு அன்னை என்ன முடிவு வழங்க விரும்புகிறாரோ அதைத் தான் ஏற்றுக் கொள்வதாகச் சொல்லி முடிவை அன்னையின் இஷ்டத்திற்கு விட்டு விடுகிறார். அதாவது, சமர்ப்பணம் என்ற அணுகுமுறையை மேற்கொள்ளும் அன்பர் தனக்கு எது நல்லது என்பது தன்னை விட அன்னைக்குத்தான் தெரியும் என்று நம்புவதால் தன் இஷ்டத்தை விலக்கிக் கொண்டு பிரச்சனையை முழுவதும் அன்னையின் கைகளில் ஒப்படைத்து விடுகிறார். “என் இஷ்டத்திற்குப் பதிலாக தங்கள் திரு உள்ளம் நிறைவேறட்டும்” என்று அர்த்தம் வருகின்ற “Let Thy Will be done, Not my will” என்ற ஒரு ஆங்கில மந்திரத்தை அன்னை தன்னுடைய யோக சாதனையில் இறைவனோடு தனக்கு உள்ள தொடர்பில், தனக்கு அவரோடு இருக்கும் alignmentஐ காப்பாற்றிக் கொள்ள அடிக்கடி சொல்வதுண்டு. இந்தச் சமர்ப்பண முறையை மேற்கொள்கின்ற அன்னை அன்பர்கள் இதே அணுகுமுறையை அன்னையிடத்தில் தாங்கள் பின்பற்றுவது உண்டு.

*தொடரும்.....*

❃❃❃

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

***அழைப்பு இடைவிடாத நினைவைத் தரும்.***

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No.238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No.11, 2nd Floor, Grace Apartments, No.177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No.5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

## நினைவும் செயலும்

- நினைவு எப்படியிருந்தாலும் பலன் செயலுக்கே வரும்.

  முழு நேரமும் பரீட்சைக்குப் படிக்க விரும்பினாலும் கொஞ்ச நேரம் படிப்பவனுக்கு மார்க் செயலுக்கேற்ப வருமே தவிர, நினைவுக்குப் பலனிருக்காது.

- ஏனெனில் முழு நேரமும் படிக்க வேண்டும் என்ற நினைவை மீறி அதற்குக் கீழே படிக்க விருப்பமிருக்காது. **பலன் ஆழ்ந்த நினைவுக்கே வரும்.**

- மனம் மாறாமல் செயல் மாறினாலும், மாறிய செயலுக்குப் பலனிருக்காது. மாறாத மனத்தையே பலன் பிரதிபலிக்கும்.

- சிஷ்யர்கள் குருவைக் கேட்டுச் செய்யப் பிரியப்படுவார்கள். ஆனால் குரு அவர்கள் மனதிலிருப்பதையே சொல்ல வேண்டும் என நினைப்பார்கள். குரு சொல்வது மாறியிருந்தால், அதை மாற்ற முயல்வார்கள். பொதுவாக அப்படிப்பட்ட சிஷ்யர்கள் கேட்பதற்கு ஏதாவது ஒரு வகையில் பதில் வாராமற் போகும்.

- **சிஷ்யனாக இருப்பது மனைவியாக இருப்பதை விட சிரமம்.**

- பகவான், பிறந்த குழந்தைக்குப் பெயர் தரவில்லையென ஒரு வருஷம் பெயர் வைக்காமலிருந்தவர் ஒரு சிஷ்யர்.

- மனம் ஏற்காமல், குரு சொல்லியதற்காகச் செய்தாலும், வாழ்க்கை மனநிலைக்கே பலன் தரும். குருவின் பேச்சைக் கேட்டதற்காகப் பலனிருக்காது. அப்பலன் வேறு வகையில் வேறு விஷயத்தில் வேறு நேரத்தில் வரும்.

- குருவுக்குச் சிஷ்யன் கேட்டதற்குப் பதில் கூற அபிப்பிராயமில்லாவிட்டால், ஒப்புக்குப் பதில் கூறினாலும், குரு மனமே பலிக்கும், சொல் பலிக்காது.

- பொருத்தமற்ற கேள்வியைச் சிஷ்யன் கேட்கக் கூடாது. கேட்டபின் குருவுக்கும் சிஷ்யனுக்கும் சங்கடம். பலன் இருவர் மனம் போல இருக்குமே தவிர, செயல் போலிருக்காது.

***குரு குழந்தைக்கு இட்ட பெயரை மாற்றுவோர் சிஷ்யன் உருவில் குருவாக இருக்க விரும்புவர்.***

❁❁❁

## ஆயுள்

- குரு இட்ட அற்புதமான பெயர், பிறர் கேலி செய்யும்படி அமைந்ததால் 35 வருஷத்திற்குமுன் தகப்பனார் சோகமானார். பையன் வளர்ந்தபின், எதிர்பாராமல் பிரபலமானபொழுது அப்பெயரின் தத்துவம் வெளி வந்தது. பையனுக்கோ, பெற்றோருக்கோ அது தெரிந்ததா எனத் தெரியவில்லை.

- பிறந்த குழந்தைக்கு ஆயுள் 2½ வருஷம் என்று ஜாதகம் கூறிய பொழுது அக்குழந்தைக்கு இட்ட பெயரால் கண்டம் விலகியது. பெற்றோர் பாஷனுக்குரியது போல் பெயரை சற்று மாற்றினர். 20ஆம் வயதில் 2½ வயதில் போன கண்டம் அவளை விரும்பியவனுக்கு வந்தது.

- கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்பவருக்குப் பதில் சொல்லக் கூடாது. பதில் கூறினால் இப்படிக் கேட்பது தவறு எனக் கூற வேண்டும். அது கடுமையாக இருப்பதால் கேட்பவருக்கு இதமான பதிலைக் கூறுவது மனத்தைப் பிரதிபலிக்காது. மனமும் செயலும் மாறுபட்டிருப்பது சரியில்லை. **மனம் செயலையும், செயல் மனத்தையும் பிரதிபலிப்பது உண்மை** (Sincerity). நாகரிகமாகப் பழக நாம் அடிக்கடி நடக்கும் முறையிது. கவனித்துப் பார்த்தால் பலன் மனத்தின் உண்மைக்கே வரும், செயலின் நாகரிகத்திற்கு வாராது.

  தினமும் ரொட்டி சாப்பிடுபவர் ஒரு நாள் ரொட்டியைத் தவிர்த்து அடை சாப்பிடும் அவசியம் ஏற்பட்டது. அவர் சாப்பிடுமுன் மேற்கூறியபடி ஒருவர் கேள்விக்கு இதமான பதிலைக் கூறினார். விளக்கமாகப் பதில் கூறும் உறவில்லை. விளக்கம் புரியும் செயலில்லை, மனிதரில்லை. உள்ள நிலையில் எதுவும் செய்ய முடியாமல் பக்குவமாக நடக்க முயன்றார். நடந்து முடிந்தபின் சமையல்காரருக்குச் செய்தி அனுப்ப முயன்றால் அவரில்லை. வேறொருவர் மூலம் ‘‘சாப்பாடு வேண்டும், ரொட்டி வேண்டாம், அடை வேண்டும்’’ எனக் கூறினார். அவரால் சமையல்காரரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. போனில் பேசுவதால் அடுத்தவரிடம் சொல்லியனுப்பினார். சமையல்காரர் வந்து, ‘‘ரொட்டி எப்பொழுது வேண்டும்?’’ என்றார். கேட்டதற்கு எதிரான பலன். ஏன் எதிரான பலன் வந்தது? தன் மனத்திற்கு எதிராக பதில் கூறுவது நாகரிகம். ஆனால் வாழ்வு மனம் போல அவர் செயலை நடத்துகிறது.

- வாழ்வு மனத்தை, அதன் ஆழத்தைப் பிரதிபலிக்கும்.

- மேலும் சிந்தனை செய்தார். ஏன் இப்படி நடந்தது என்று தன்னையே கேட்டுக் கொண்டார்.

  ‘‘சமர்ப்பணம் செய்யத் தோன்றவில்லை’’ என்ற பதில் கிடைத்தது.

***"எனக்குச் சேவை செய்ய மறுக்கும் இறைவன் எதற்கு?" என்பது எளிய மனநிலை.***

❁❁❁

Vol. I Issue 11 February 2012
Malarndha Jeeviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/2012-2014
Regd. with the Registrar of Newspaper for India vide Registration No. PON TAM/2011/36935
Price: Rs.5/- WPP No.45/09-11

**புதிய வெளியீடுகள்**

**ESSAYS ON ACCOMPLISHMENT** ரூ.150/-
N.Asokan

**கர்மயோகியின்**

**அன்னையின் ஆன்மீகப்பரிசு** ரூ.100/-

**லைப் டிவைன் - கருத்துகள்** ரூ.100/-

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

**சொசைட்டியின் பிற வெளியீடுகள்**

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.25/- சேர்த்து M.O. செய்யவும்

**கிடைக்குமிடம்**

| பாண்டியில் | சென்னையில் |
|---|---|
| மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி, | மாம்பலம் தியான மையம், |
| 5, புதுவை சிவம் தெரு, | 23/1, மேற்கு சாலை, |
| வெங்கட்டா நகர் விரிவு, | மேற்கு C.I.T. நகர், |
| புதுச்சேரி - 605 011. | சென்னை - 600 035. |
| ✆ : (0413) 2212443, 2210514 | ✆ : (044)-24347191 |

Vol. I Issue 11 February 2012

# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

## பிப்ரவரி 2012